REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஏப்ரல் 8 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN
92 1932–2024 ANNIVERSARY
තිනකරන්

வரு. 92 இல. 85 | Monday 08, April, 2024 | 16பக்கங்கள் | 50/-

எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு

## 13, 14ஆம் திகதிகளில் மது விற்பனைகளுக்கு தடை

லோரன்ஸ் செல்வநாயகம்



எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டையொட்டி 13 மற்றும் 14ஆம் திகதிகளில் மதுபான சாலைகள் மூடப்படும் என கலால் வரி திணைக்களம் தெரிவித்துள்ளது. அந்த வகையில் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து 06

போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கை;

## மற்றுமொரு வேலைத் திட்டம் ஆரம்பம்

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன்

லோரன்ஸ் செல்வநாயகம்



கையடக்கத் தொலைபேசி மூலம் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் முறைமையை உபயோகித்து மேற்கொள்ளப்படும் சட்ட விரோத போதைப் பொருள் விற்பனை செயற்பாடுகளை இல்லாதொழிப்பதற்கான விசேட வேலை த்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் 06

## IMF இன் மூன்றாவது தவணை ஜூன் மாதத்திற்குள் கிடைக்கும்

இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நம்பிக்கை



சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட நிதி வசதியின் மூன்றாவது தவணை ஜூன் மாதத்திற்குள் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர், "ஜூன் மாதத்திற்குள் மூன்றாவது தவணையை எதிர்பார்க்கிறோம். அதுதான் நிலையான நடைமுறை.

கடன் மறுசீரமைப்பிற்கு பின்னர் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் மற்றும் அரசாங்க 06

## நாட்டை வெற்றியடையச் செய்யும் பாரிய பொறுப்பு இளைஞர்களிடம்

அநுராதபுரம் இளைஞர் மாநாட்டில் ஜனாதிபதி ரணில் உரை



நவீன விவசாயம், சுற்றுலா மற்றும் வலு சக்தித் துறைகளில் பரிவர்த்தனை ரீதியிலான மாற்றத்துடன் 2048 ஆம் ஆண்டளவில் வளமான இலங்கையை கட்டியெழுப்பும் பயணத்தை அரசாங்கம் தற்போது ஆரம்பித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 06

# சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தின் கதவை மூடியது பொலிஸார் அல்ல

## கட்டடத்தின் பாதுகாப்பை மட்டுமே நாம் மேற்கொள்கிறோம்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ



லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பு 10 டி.பி. ஜாயா வீதியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தின் கதவை மூடியது பொலிஸார் அல்லவென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கட்சியின் சிலரே அங்கு வந்து கதவை மூடி சாவியை எடுத்துச் சென்றார்களென்றும் பொலிஸார் அங்கு மோதல்கள் இடம்பெறுவதை தடுக்கும் வகையிலேயே அந்த தலைமையக கட்டடத்திற்கு பாதுகாப்பை மாத்திரம் வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அங்கு இருந்த முக்கியமான ஆவணங்கள் சில காணாமற் போயுள்ளதாக அந்தக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபால எம்.பி. மருதானை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்தவகையில், அங்கு இடம்பெற்றுள்ளது திருட்டா என்பது தொடர்பில் விசாரணைகளை 06

**லசந்த அழகியவன்ன**



சுதந்திரக் கட்சியின் இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன அதுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கயில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரென்ற வகையில் கட்சியின் எந்தவொரு சொத்தையும் அழிக்கவேண்டிய தேவை தமக்கு கிடையாதென்றும் ஆவணங்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக முன்வைக்கப்படும் 06

## ஹொரணையில் துப்பாக்கிச் சூடு; இருவர் பலி; ஒருவர் காயம்

பொலிஸ் ஊடக அலுவலகம் தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

ஹொரணை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ள துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்றில் இருவர் 06

## புதுவருட விடுமுறையில் அரச ஊழியர்களது பணி

உள்ளூராட்சி அமைச்சு விசேட அறிவிப்பு

எதிர்வரும் 11ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரையான நீண்ட விடுமுறைக்கு அமைய அரச ஊழியர்களது கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பான அறிவிப்பை பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்டுள்ளது. அனைத்து மாவட்ட செயலாளர் 06

## அரச துறை சம்பள முரண்பாடு; விசேட ஆணைக்குழு நியமிக்க அரசு தீர்மானம்



லோரன்ஸ் செல்வநாயகம்

அரச துறையில் பல்வேறு பிரிவுகளிலும் நிலவும் சம்பள முரண்பாடு மற்றும் சம்பள நெருக்கடி நிலைகளை நிவர்த்தி செய்யும் வகையில் சம்பள முரண்பாட்டை நிவர்த்தி செய்வதற்கான 06

## எரிபொருள் பாவனை 50% குறைந்துள்ளது

பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம்



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் எரிபொருள் பாவனை 50 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அந்த வகையில் எரிபொருள் விற்பனையும் குறைவடைந்துள்ளதாகவும் எரிபொருள் பாவனை குறைவதற்கு நாட்டின் பொருளாதார நிலைமையும் 06

## அரச ஊழியர் சம்பளம் 10ஆம் திகதிக்கு முன்னர்

ஓய்வூதியமும் முன்னதாக வழங்க ஏற்பாடு



அரச ஊழியர்களின் ஏப்ரல் மாத கொடுப்பனவு எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கொடுப்பனவில் 2024ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் அதிகரிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவும் உள்ளடங்கியுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி ஒவ்வொரு பணியாளருக்கும் கூடுதலாக 10,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும். 06

### ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 06-11 |
| --- | --- |
| ஸஹர் முடிவு | 04.35 |
| ஸுபஹ் | 04.50 |
| சூரிய உதயம் | 06.07 |
| ழுஹர் | 12.14 |
| அஸர் | 03.16 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.30 |

## சாரதி அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்க முடியாத நிலை



லோரன்ஸ் செல்வநாயகம்

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாடுகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது. 06

## JVP அநுரவின் யாழ். உரை குறித்து சிறிதரன் MP கடும் அதிருப்தி

தமிழருக்கு எதுவுமே தென்படவில்லை என விசனம்



யாழ்., மானிப்பாய் நிருபர்

அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரையில் தமிழர்களுக்கான நம்பிக்கை ஒளிக்கீற்று எதுவும் தென்படவில்லை எனவும், மாறாக ஏனைய சிங்களத் தலைவர்களை விடவும் தமிழர் நலன்கள் தொடர்பான மிகக் குறைந்தளவிலான 06



## நேபாளத்தில் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்ட இலங்கையர் மீட்பு

பாகிஸ்தான் பிரஜைகள் நால்வர் அதிரடியாக கைது



பல்வேறு ஐரோப்பிய நாடுகளுக்கு தொழில் நிமித்தம் அனுப்புவதாக கூறி நான்கு இலங்கையர்களை பணயக் கைதிகளாக பிடித்து வைத்திருந்த பாகிஸ்தான் பிரஜைகள் 04 பேர் நேபாளத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேபாள குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி கைது செய்யப்பட்ட பாகிஸ்தானிய பிரஜைகள், கனடா மற்றும் ருமேனியாவில் வேலை வாங்கித் தருவதாக பொய்யான தகவல் கொடுத்து நான்கு இலங்கையர்களிடம் பணம் பெற்றுள்ளதாக நேபாள பொலிஸார் தெரிவித்துள்ளனர். 06

இன்றைய தினகரனுடன் இலவச பஞ்சாங்கம்



## பண்டிகை காலங்களில் அவதானமாக இருக்கவும்

பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்து



பண்டிகை காலங்களில் போலி நாணயத்தாள் மோசடியாளர்கள் மற்றும் மோசடி வியாபாரிகள் குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸார், பொதுமக்களுக்கு 06

## தலைகீழாக குடைசாய்ந்த எரிபொருள் பவுஸர்

வீதியில் மண்ணெண்ணெய் வழிந்தோடி நாசம்



மாத்தளை - லக்கல, வில்கமுவ பிரதேசத்தில் எரிபொருள் தாங்கி ஒன்று கவிழ்ந்ததில் மண்ணெண்ணெய் வீதியெங்கும் வழிந்தோடியுள்ளதாக 06

## இலங்கைக்கு ஆயிரக்கணக்கான மெற்றிக் தொன் வெங்காயம் வழங்க இந்தியா முடிவு

'அண்டை நாடுகளுக்கு முதலிடம்' கொள்கையின் கீழ் தீர்மானம்

இலங்கைக்கு ஆயிரக்கணக்கான மெற்றிக் தொன் வெங்காயத்தை வழங்குவதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசின் 'அண்டை நாடுகளுக்கு முதலிடம்' என்ற வெளியுறவுக் கொள்கையின் கீழ், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திகள் குறிப்பிடுகின்றன.

அதேவேளை மாலை தீவுக்கும் அதிகளவில் அத்தியாவசியப் பொருட்களை வழங்க இந்தியா முடிவு செய்துள்ள நிலையில், அதனையடுத்தே இலங்கை 06

## பிரசவ அறைக்குள் கணவன்மாருக்கு அனுமதி

அரச மருத்துவ மனைகளில் திட்டம் அமுலாகிறது



மகப்பேற்றுக்காக வரும் கர்ப்பிணிகளுடன் அவர்களது கணவன்மாரும் பிரசவ அறைக்குள் பிரவேசிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள மகப்பேற்று மருத்துவமனையின் பணிப்பாளர் 06

## UK யில் சாதனை படைத்த இலங்கை தமிழ் பெண்

விமான பொறியியல் துறையில் முன்னிலை



மட்டக்களப்பு வின்சன் பாடசாலையின் பழைய மாணவியான பூஜா உமாசங்கர் ஐக்கிய இராச்சியத்தில் சாதனை படைத்துள்ளார். கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரான S. உமாசங்கர், ஓய்வு பெற்ற ஆசிரியை ரசிகா நில்மினி 06

92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்



ரயில்வே திணைக்கள காணிகளை...

## 10 வருடங்களுக்கு மேல் பயன்படுத்துவோருக்கு காணிகளை குத்தகைக்கு வழங்க தீர்மானம்

**பதுளையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**

ரயில்வே திணைக்களத்தின் காணிகளை சட்டபூர்வமற்ற வகையில் 10 வருடங்களுக்கு மேல் பயன்படுத்துவோரிடமிருந்து முறையான வகையில் வரி அறவிடும் வகையில் அந்த காணிகளை குத்தகைக்கு வழங்க தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அதேவேளை, 10 வருடங்களுக்கு குறைவாக ரயில்வே காணிகளில் வசிப்போர் மற்றும் அவற்றை உபயோகப்படுத்துவோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் அவ்வாறானவர்கள் ரயில்வே திணைக்களத்துக்கு மேன் முறையீடு செய்தால் அது தொடர்பில் ஆராய்வதற்கான வாய்ப்புகளும் உள்ளதாக அவர் தெரிவித்தார்



ரயில்வே திணக்களத்தின் காணிகளை முறையாக பயன்படுத்தி அதன் மூலம் எத்தகைய வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியும் அதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்பன தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிக்கையொன்றை கோரியுள்ளதாகவும் அதற்கிணங்க மேற்படி நடவடிக்கைகள் மிக விரைவாக முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பு பதுளைக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டு 100 வருடங்கள் நிறைவடைவதையடுத்து பதுளை ரயில் நிலையத்தில் விமரிசையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நிகழ்வில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள்,ரயில்வே திணைக்கள உயர திகாரிகள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் விசேட நினைவு முத்திரையும் வெளியிடப்பட்டது.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான காணிகளில் வசிப்பவர்கள் அந்த காணிகளில் விவசாயம்,கைத்தொழில், வர்த்தகம் உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். அவர்கள் ரயில்வே திணைக்களத்துக்கு வரி செலுத்துவதில்லை. அவர்களிடமிருந்து முறையாக வரியை அறவிடும் வகையிலேயே நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. எந்த வகையிலும் அந்த காணிகள் அவர்களுக்கு ஒருபோதும் சொந்தமாக வழங்கப்பட மாட்டாது என அமைச்சர் தெரிவித்தார்.

## புத்தளத்தில் 'பைத்துல் முகத்தஸ்' தினம் அனுஷ்டிப்பு

**புத்தளம் தினகரன் நிருபர்**




கடந்த 45 வருடங்களாக சர்வதேச நாடுகளால் அனுஷ்டிக்கப்பட்டு வரும் "பைத்துல் முகத்தஸ்" தினம் ரமழானின் இறுதி வெள்ளிக்கிழமை (05) புத்தளம் பெரிய பள்ளிக்கு முன்பாக இடம் பெற்றது.

புத்தளம் முஹியத்தீன் ஜும்ஆ பெரிய பள்ளியில் ஜும்ஆ தொழுகை நிறைவடைந்ததும் இந்நிகழ்வு ஆரம்பமானது. பலஸ்தீனுக்கு ஆதரவாக பொது மக்கள் அமைதியான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஐ.எம். இல்யாஸ் இந்நிகழ்வுக்கு தலைமை வகித்தார். சமூக ஆர்வலர் இப்லால் அமீன், புத்தளம் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஜெளபர் மரிக்கார் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களும் பொதுமக்களும் இவ் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

பெருமளவிலான பொலிஸார் பெரிய பள்ளிக்கு முன்பாக குவிக்கப்பட்டிருந்த நிலையில் ஆர்ப்பாட்ட பேரணிக்கும் ஒலி பெருக்கி பாவனைக்கும் பொலிஸார் தடை விதித்திருந்தனர். இறுதியாக டாக்டர் ஐ.எம்.இல்யாஸ், இப்லால் அமீன் ஆகியோரது உணர்வு பூர்வமாக உரையினை தொடர்ந்து அமைதியான இந்த ஆர்ப்பாட்டம் நிறைவு பெற்றது.

## அந்நஹ்லா அஹதிய்யா பாடசாலை மாணவர்களின் இப்தார் நிகழ்வு





அநுராதபுரம் இஹலபுளியங்குளம் அந்நஹ்லா அஹதிய்யா பாடசாலை மாணவர்களின் இப்தார் நிகழ்வு அஹதிய்யா அதிபர் எம். ஆர்.எம்.ரனீஸ் மற்றும் மௌலவி பீ.ஜாயிஸ் (உஸ்வி) ஆகியோரின் தலைமையில் அந்நஹ்லா கல்வி மத்திய நிலையத்தில் (04) நடைபெற்ற போது பிடித்த படம். (படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## செங்கலடி இலுப்படிச்சேனையில் வர்த்தக நிலையங்கள் திறப்பு

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பங்கேற்பு





செங்கலடி இலுப்படிச்சேனையில் உள்ளூர் தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தும் நோக்கில் வர்த்தக நிலையங்களை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்தார். 22 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கிராமிய வர்த்தக நிலையங்கள் மக்கள் பாவனைக்காக இதன்போது கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உட்பட அரச அதிகாரிகளும் கலந்துக் கொண்டனர்.

காஸா நிவாரண பணிக்கு

## ஊற்றுப்பிட்டி ஒன்றிணைந்த உதவும் கரங்கள் நிதியுதவி

**கெக்கிராவ குறுப் நிருபர்**

காஸாவில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவுவதற்காக ரூ. 2,45,000.00 பணத்தொகையை ஊற்றுப்பிட்டி ஒன்றிணைந்த உதவும் கரங்கள் அனுப்பி வைத்துள்ளது.

இஸ்ரேலிய இராணுவத்தின் தாக்குதலின் காரணமாக, பாலஸ்தீன காஸா பகுதியில் ஏற்பட்டுள்ள மோதலினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு உதவுவதற்காக இலங்கை ஜனாதிபதி செயலகத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டத்திற்கான உதவித்தொகையாக, இரண்டு லட்சத்து நாற்பத்து ஐந்தாயிரம் ரூபாக்களை ஊற்றுப்பிட்டி ஒன்றிணைந்த உதவும் கரங்கள் அனுப்பி வைத்துள்ளது.

இந்த நன்கொடை உத்தியோகபூர்வமாக, ஜனாதிபதி மூலம் அறிவிக்கப்பட்ட வங்கிக் கணக்கிற்கு, ஒன்றிணைந்த உதவும் கரங்கள் (UAH) ஊடாக அனுப்பி வைக்கப்பட்டதோடு, சொந்த நாட்டிலேயே உண்ண உணவின்றி ஒதுங்க இடமின்றி உடுத்த உடையின்றி நிம்மதியற்ற அகதிகளாக ஆக்கப்பட்டுள்ள அந்த காஸா மக்களுக்காக பிரார்த்திக்குமாறு ஊற்றுப்பிட்டி பிரதேச வாழ் மக்கள் மிகவும் பணிவுடன் வேண்டி நிற்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

## சாய்ந்தமருது ஹிலாலியன்ஸ் மாணவ, மாணவிகளின் இப்தார் நிகழ்வு





சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தின் கல்வி கற்ற புலமைப் பரிசில் 2011ஆம் பிரிவு மாணவ, மாணவிகள் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு அண்மையில் மாளிகைக்காடு பாவா ரோயல் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

"நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து நீண்ட நாட்களாகிவிட்டது, எனவே மீண்டும் இணைவோம்" எனும் தொனிப்பொருளில் இடம் பெற்ற இந்த இப்தார் நிகழ்வுக்கு மயோன் குழுமத்தின் தலைவரும், ரிஸ்லி முஸ்தபா கல்வி உதவி மற்றும் சமூக சேவைகள் அமைப்பின் தலைவருமான எம். ரிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில், அல்ஹிலால் வித்தியாலயத்தின் அதிபர் யூ.எல். நஸார், ஓய்வு பெற்ற அதிபர்களான ஐ.எல்.ஏ. மஜீத், திருமதி. எச்.ஏ. லத்தீப் பாடசாலையின் முன்னாள் அதிபர்களான ஏ.பி. முஜீன், எம்.எஸ்.எம். பைஷால் மற்றும் சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். எல். சம்சுதீன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் எம். சி.என். றிப்கா, பிரதி அதிபர் எம். எச். நுஸ்ரத் மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் பிரதி அதிபர் ஐ.எல். எம். மன்சூர் ஆகியோர் நிகழ்வில் கெளரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது நிகழ்வில் கலந்து கொண்ட ஹிலாலியன்ஸ் புலமைப் பரிசில் 2011பிரிவு மாணவ, மாணவிகள் அனைவருக்கும் ஞாபகார்த்தமாக நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

**எம்.எஸ்.எம்.ஸாகிர்**

## நீர்கொழும்பில் 'சகவாழ்வு சங்க' ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு



**நீர்கொழும்பு தினகரன் நிருபர்**

நீர்கொழும்பு பிரதேச செயலக சகவாழ்வு சங்கம் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை (04) நீர்கொழும்பு, பெரியமுல்ல சவுண்டர்ஸ் பெளஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

நீர்கொழும்பு பிரதேச செயலாளர் ரசிகா மல்லவராச்சி தலைமையில் நடைபெற்ற மேற்படி இப்தார் நிகழ்வில் நீர்கொழும்பு வலய பொலிஸ் அத்தியட்சகர் எரிக் பெரேரா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

நீர்கொழும்பு பெரியமுல்ல ஜும்ஆப் பள்ளிவாசலின் பிரதம பேஷ் இமாம் ஐ.எல்.எம். ஹனீபா, அங்குருகாரமுல்ல பெளத்த விகாரையின் பிரதம பெளத்த மதகுரு உட்பட நீர்கொழும்பு வலய கத்தோலிக்க திருச்சபையின் பாதிரியார் சிஸ்வான் குரூஸ் மற்றும் பல்லஞ்சேனை, கதரகம இந்துக் கோயிலின் குருக்கள் ரவீந்திரன் குருக்கள் ஆகியோர் இந்நிகழ்வில் விசேட அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

நீர்கொழும்பு பெரியமுல்ல ஜும்ஆப் பள்ளிவாசலின் தலைவர் எம்.எஸ்.எம்.அன்வர் உட்பட நிர்வாக சபையினர் குறித்த இப்தார் நிகழ்வுக்கு பூரணமான ஒத்துழைப்புக்களை வழங்கினர். இந்நிகழ்வில் மினுவங்கொட, கோபியாவத்த பள்ளிவாசலின் பிரதம மௌலவி துவான் முராத் பகீர் விசேட உரையையும், துஆ பிரார்த்தனையையும் நடாத்தினார்.



தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரியின் 87 ஆம் ஆண்டு ஜீ.ஸீ.ஈ. சாதாரண தர மாணவர் சங்க ஏற்பாட்டில் ரமழான் இப்தார் நிகழ்வொன்று அதன் தலைவர் அஷ்ஷெய்க் எம்.எச். எம். பர்ஹான் (நளீமி) தலைமையில் கல்லூரி நளீம் ஹாஜியார் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. அதிபர் நிஸ்ரின் அஷ்கர், முன்னாள் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், 87ஆம் ஆண்டு ஜீ.ஸீ.ஈ. சாதாரண தர மாணவர் சங்க உறுப்பினர்கள் இதில் பங்குபற்றினர்.



பாலஸ்தீனில் இடம்பெற்றுவரும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட காஸா மக்களுக்காக மனிதாபிமான முறையில் அவர்களின் துயர் துடைக்கும் எண்ணத்துடன் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் கல்வி சார் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து ஒரு தொகைப் பணத்தினை (05) கல்முனை கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ. ஜாபிரிடம் பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம். றிசாத், பிரதி அதிபர் எம்.ரீ.ஏ.முனாப் ஆகியோர் இணைந்து கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படம் எம்.எஸ்.எம்.ஸாகிர்)

## "விழித்தெழு" சர்வதேச விருது பெறும் சிறிலங்கா பென் கிளப் கவிதாயினிகள்

கனடாவை தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் "விழித்தெழு" பெண்ணே சர்வதேச அமைப்பின் தமிழ்ப்பெண் ஆளுமைகளின் சர்வதேச விருதுவிழா 2024 இன்று 08ஆம் திகதி திங்கட்கிழமை கண்டி கோல்டன் க்ரவுன் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.இம்முறை சிறிலங்கா பென் கிளப்பின் அங்கத்தவர்கள் நான்கு பேருக்கு "விழித்தெழு" சர்வதேச விருது கிடைக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது. சிறிலங்கா பென் கிளப்பின் ஸ்தாபகத் தலைவி இலக்கிய வித்தகர் சம்மாந்துறை மஷூறா, உப தலைவி திருகோணமலை மர்ளியா சக்காப், நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளர் கண்டி கலாபூஷணம் அறபா மன்சூர், சிரேஷ்ட உறுப்பினர் கலாபூஷணம் இஸ்மாலிஹா ராஜா ஆகியோரே இவ் விருதுக்காகத் தெரிவாகியுள்ளனர். மர்ளியா சக்காப் கல்வித் துறைக்காகவும் ஏனைய மூவரும் இலக்கியத்துறைக்காகவும் விருதுபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹிங்குராங்கொட விமான நிலையம் அபிவிருத்தி

## மறுசீரமைப்பு திட்டம் அரசினால் முன்னெடுப்பு




இரண்டாம் உலகப் போருக்கு முந்தைய வரலாற்று சிறப்புமிக்க ஹிங்குராங்கொட உள்நாட்டு விமான நிலையத்தை மறுசீரமைக்கும் திட்டத்தை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

ஆரம்பத்தில் "RAF மின்னேரியா" என அழைக்கப்பட்ட இந்த விமான நிலையம் இரண்டாம் உலகப் போரின் போது இங்கிலாந்தின் ரோயல் விமானப்படைக்கு ஒரு மூலோபாய தளமாக செயல்பட்டது.

2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஹிங்குராங்கொடை சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்திக்காக இரண்டு பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

விமான நிலைய அபிவிருத்தி பணியில் முதல் கட்டமாக ஓடு பாதையை நீடிப்பதில் கவனம் செலுத்தப்படும். தற்போது 2287 மீட்டர் நீளமும், 46 மீட்டர் அகலமும் கொண்ட இந்த ஓடுபாதை மொத்தம் 2500 மீட்டர் நீளத்திற்கு விரிவுபடுத்தப்படும்.

இதனை அபிவிருத்தி செய்வதால் விமான நிலையத்தில் பிரபலமான ஏர்பஸ் ஏ320 மற்றும் போயிங் பி737 மாடல்கள் உட்பட பெரிய விமானங்கள் வருகை தர இடமளிக்கும். விரிவான நவீனமயமாக்கல் திட்டத்திற்கு மொத்தம் 17 பில்லியன் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடதத்தக்கது.



லேக் ஹவுஸ் நிறுவனத்தில் 25 வருட கால சேவையை நிறைவு செய்த ஊழியர்களை பதக்கம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் போராசிரியர் ஹரேந்திர காரியவசம் தலைமையில் நிறுவனத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.


## இலங்கை பைத்துல்மால் நிதியம்

### 2024ஆம் ஆண்டிற்கான ஜீ.சீ.ஈ. உயர்தர புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கீழே குறிப்பிட்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்

- ஸகாத் பெற தகுதியுள்ள வறிய முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள்
- டிசம்பர் 2022ஆம் ஆண்டிற்கான ஜீ.சீ.ஈ. (சா/த) பரீட்சையில் தோற்றி குறைந்தது 28 புள்ளிகள் பெற்ற சித்தியடைந்தவர்கள் (புள்ளிகள் விபரம்: A-4 புள்ளிகள், B-3 புள்ளிகள், C-2 புள்ளிகள், S-1 புள்ளி)

விண்ணப்பப் படிவங்களை 2024 May 01ம் திகதி வரை பைத்துல்மால் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டிய நீண்ட கடித உறையை கடித உறைக்குள் வைத்து அனுப்பி தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம். அல்லது 'c.baithulmal@gmail.com' என்ற மின்னஞ்சலினூடாக கோரிக்கை ஒன்றினை இட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2024 May 31ம் திகதிக்கு முன்னர் அனுப்பவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'ஜீ.சீ.ஈ. உயர்தர புலமைப்பரிசில் - 2024' எனக் குறிப்பிடவும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**Ceylon Baithulmal Fund,**
**44A, Haig Road, Bambalapitiya, Colombo -04.**





# ஷவ்வால் மாத ஆறு நோன்பு

அல்லாஹ் தனது அடியார்கள் மீது பர்ளான வணக்கங்களுடன் உபரியான வணக்கங்களையும் மார்க்கமாக ஆக்கியுள்ளான். ஏனெனில், உபரியான வணக்கங்களைப் பொருத்தவரையில் அது பர்ளான வணக்கங்களில் அடியார்களிடம் ஏற்படும் குறைகளை ஈடுசெய்யக்கூடியதாக அமையும்.

ஒரு அடியான் அல்லாஹ்வை உபரியான வணக்கங்களின் மூலமாக நெருங்கும் போது அவனை அல்லாஹ் விரும்புகின்றான். அதனால் ரமழான் மாதத்திற்கு அடுத்து வரக்கூடிய ஷவ்வால் மாதத்தின் ஆறு நோன்புகளை நோற்பதை மார்க்கம் எமக்கு சுன்னத்தாக ஆக்கியுள்ளது. அந்த நோன்புகளையும் நபி (ஸல்) அவர்கள் ஊக்குவித்துள்ளதோடு அதன் சிறப்புகளையும் எடுத்துக் கூறியுள்ளார்கள்

'ரமழான் மாதம் நோன்பு நோற்று அதைத் தொடர்ந்து ஷவ்வால் மாதத்தில் ஆறு நோன்புகளையும் நோற்றவர் காலமெல்லாம் நோன்பு நோற்றவரைப் போன்றவராவார் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: ஸஹீஹு முஸ்லிம்)

இமாம் நவவி (ரஹ்) அவர்கள் இந்த ஹதீஸுக்கு வழங்கியுள்ள விளக்கத்தின் படி, ஷவ்வால் மாதத்தின் ஆறு நோன்புகளையும் ஷவ்வால் மாதத்தின் ஆரம்பத்தில் தொடர்ச்சியாக நோற்பது (முஸ்தஹப்) விரும்பத்தக்கதாகும்.

எனினும், ஒருவர் அதனை அம்மாதத்திற்குள் விட்டு விட்டு நோற்பதும், ஷவ்வால் மாதத்தின் ஆரம்பப் பகுதியை விட்டும் அதனை பிற்படுத்தி அம்மாதத்திற்குள் நோற்பதும் ஆகுமானதாகும்.

ஆகவே, ஒவ்வொருவரும் மேற்படி வழிகாட்டல்களுக்கமைய அவரவரது சக்திக்கேற்ப அதனை ஷவ்வால் மாதத்திற்குள்ளே நோற்றுக்கொள்வது சிறப்பானதாகும். அதற்கேற்ப முயற்சிப்போம்.

முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

காத்தான்குடி பொலிஸ் பிரிவில்;

# சட்டவிரோத பதிவாளர் அலுவலகம் சுற்றிவளைப்பு; தஸ்தாவேஜுகள் மீட்பு

(ஜவ்பர்கான், மட்டக்களப்பு குறூப் நிருபர்)



காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லடியிலுள்ள வீடொன்றிற்குள் சூட்சுமமான முறையில் நடத்திச்செல்லப்பட்ட சட்டவிரோத பதிவாளர் அலுவலகம் சுற்றிவளைக்கப்பட்டதில், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். விஷேட அதிரடிப்படையினர் இச் சுற்றி வளைப்பு தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

சந்தேக நபரிடமிருந்து தரிசுக் காணிகளுக்கான 205 உறுதிப்பத்திரங்கள், 58 வெற்று உறுதிப்பத்திரங்கள், 63 காணி மாற்று உறுதிப் பத்திரங்கள், கணினி மற்றும் பிரிண்டர், தட்டச்சு இயந்திரங்கள்,வெவ்வேறு அதிகாரிகளின் உத்தியோகபூர்வ கையொப்பத்துடன் கூடிய 30 பத்திரங்கள், 12 தேசிய அடையாள அட்டைகளின் 12 பிரதிகள் என்பன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பை சேர்ந்த 54 வயதான ஒருவரே பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி கஜநாயக்க தெரிவித்தார். காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.


## போதனா வைத்தியசாலை - கராப்பிட்டிய

## கேள்வி அறிவித்தல்

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் உள்ள பின்வரும் நிர்மாணங்களுக்காக தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களைக் கோருவதற்கு வைத்தியசாலை கேள்விச் சபையின் தலைவரினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிர்மாணங்களின் பொருட்டான அனைத்துக் கேள்விப் படிவங்களும் இரு பிரதிகளில் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொ. இல. | வேலையின் பெயர் | விண்ணப்பதாரரின் தகைமை | மீளளிக்கப் படாத விண்ணப்பப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணை முறியின் பெறுமதி | மதிப்பீடு செய்யப்பட்ட அடிப்படைச் செலவு மில்லியன் |
|---|---|---|---|---|---|
| 1 | வைத்தியசாலை கட்டிடங்களின் வெளி முகங்களை (External Faces) நவீனமயப் படுத்தல் (வலய இல. 01) | C5, C6 மற்றும் C7 | 3,500.00 | 174,000.00 | 17.4 |
| 2 | வைத்தியசாலை கட்டிடங்களின் வெளி முகங்களை (External Faces) நவீனமயப் படுத்தல் (வலய இல. 02) | C5, C6 மற்றும் C7 | 3,500.00 | 170,000.00 | 17.0 |
| 3 | வைத்தியசாலை கட்டிடங்களின் வெளி முகங்களை (External Faces) நவீனமயப் படுத்தல் (வலய இல. 03) | C5, C6 மற்றும் C7 | 3,500.00 | 175,000.00 | 17.5 |
| 4 | 12/35 உத்தியோகபூர்வ விடுதியை நவீனமயப் படுத்துதல் | C6 மற்றும் C7 | 3,500.00 | 81,000.00 | 8.1 |

01. இதன்பொருட்டு அலுவலகத்தில் வழங்கப்படும் மாதிரிப் படிவங்களில் மாத்திரமே விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. கேள்வி ஆவணங்களை மீளளிக்கப்படாத பிணை வைப்பைச் செலுத்தி வார நாட்களில் 2024-04-28ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வைத்தியசாலை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

03. 2024-04-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் என்பதுடன் அதற்கு முன் கிடைக்கும் வகையில் கேள்விப் படிவங்களை தலைவர், பெறுகைக் குழு, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம். குறித்த நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும். கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு கலந்துகொள்ளலாம்.

04. கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம் மற்றும் குறித்த வேலையின் பெயரை மிகவும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. எந்தவொரு கேள்விப் படிவத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை வைத்தியசாலை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

விபரங்களை 091-2222250, 091-2232176 எனும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**கராப்பிட்டிய, காலி.**
2024-04-08.



## INVITATION FOR BIDS (IFB)

**DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE**
**VALIKAMAM EAST PRADESHIYA SABHA**
**LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a **Grant** from the **European Union** towards the cost of **Local Development Support Project**, and intends to apply part of the proceeds of this credit to payments under the Contract for the work(s) stated in the Table below.

2. The **Chairman, Local Authority Procurement Committee, Local Development Support Project (LDSP) on** behalf of the **Valikamam East Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the work(s) stated in the Table below.

| No | Contract No | Contract Name | Estimated Cost (Rs. Mn) Without VAT | CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/VEPS/2024/PT-2/02 | IMPROVEMENT OF INFRA STRUCTURE FACILITIES FOR MARKETING LOCAL ANIMAL PRODUCT AT VALIEASTPRADESHIYA SABHA | 10.99 | C6 or above BUILDING | 90 | 77 Days | 110,000.00 | 13-Aug-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.

4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

5. Qualification requirements to qualify for contract award are included in Section 4 (Qualification Information) and Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.

6. Interested bidders may obtain further information from **Secretary, Valikamam East Pradeshiya Sabha, Point Pedro Road, Puttur, (T.P No: 021 205 8867)** and inspect the bidding documents at **Valikamam East Pradeshiya Sabha, Point Pedro Road, Puttur,** from 08-**Apr-2024** until 29-**Apr-2024** between **09:00 Hrs** to **15:00 Hrs** on normal working days.

7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Valikamam East Pradeshiya Sabha, Point Pedro Road, Puttur** from 08-**Apr-2024** until 29-**Apr-2024** between **09:00 Hrs.** to **15:00 Hrs.** on normal working days upon payment of a non-refundable fee of **Rs.3,500.00**. The method of payment will be **by cash.**

8. Bids (Original and Copy) shall be delivered to **Chairman, Local Authority Procurement Committee (LAPC), Local Development Support Project (LDSP), Valikamam East Pradeshiya Sabha , Point Pedro Road , Puttur, Jaffna** on or before **10.30** Hrs on **30-Apr-2024** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

9. The Bid shall be valid up to 77 days after the deadline for Bid submission. All bids shall be accompanied by a Bid Security as stated in the Table above.

10. The Pre-Bid meeting will be held at Valikamam East Pradeshiya Sabha -Head Office, Point Pedro Road – Puttur on 15th Apr 2024 at 14.00 hrs, Interested Bidders may participate in this meeting their own expenses.

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Local Development Support Project (LDSP),**
**Valikamam East Pradeshiya Sabha , Puttur.**

**08.04.2024**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 26ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 28

## குறள் தரும் சிந்தனை



மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

இல்லறத்திற்குரிய பண்புகளுடன், பொருள் வளத்துக்குத் தக்கவாறு குடும்பம் நடத்துபவள், கணவனின் வாழ்வுக்குப் பெருந்துணையாவாள்.

# நாட்டில் இதுவரை ஏற்பட்டுள்ள நம்பிக்கை தரும் முன்னேற்றங்கள்

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதை இலக்காகக் கொண்டு இலங்கை ஆரம்பித்துள்ள வேலைத்திட்டங்கள் நம்பிக்கை அளிக்கும் வகையில் முன்னோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றது முதல் தொடங்கப்பட்ட இப் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களின் பயனாக நாட்டில் புதிய நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புக்களும் உருவாகியுள்ளன.

இப்பொருளாதார வேலைத்திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களின் பயனாக 2022 ஆம் ஆரம்பப் பகுதியில் நாடும் மக்களும் முகம்கொடுத்த நெருக்கடிகளும் அசௌகரியங்களும் பெரும்பாலும் நீங்கியுள்ளன. இந்தப் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களின் பயனாக நாட்டின் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. வெளிநாட்டு நாணயக் கையிருப்பிலும் கூட குறிப்பிடத்தக்க அதிகரிப்புகள் ஏற்பட்டுள்ளன.

அதேநேரம் தற்போதைய பொருளாதார மறுசீரமைப்பு திட்டங்களின் பயனாக நாடு அடைந்து கொள்ளும் பிரதிபலன்கள் மக்களுக்கு கிடைக்கப் பெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களில் இருந்து முழுமையாக மீட்சி பெறுவதை அனைத்து வேலைத் திட்டங்களும் இலக்காகக் கொண்டுள்ளன.

அந்த வகையில் கடந்த பெப்ரவரியில் 4.52 பில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்ட இலங்கையின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு, தற்போது 4.95 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, 'அண்மைக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தற்போது பெறுபேறாக நிலைமாற்றமடைய ஆரம்பித்துள்ளது. அதன் வெளிப்பாடே இந்த வெளிநாட்டு கையிருப்பின் அதிகரிப்பு' என்றுள்ளார்.

ஆனால் இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு 2022 இன் ஆரம்பப்பகுதியில் பெரிதும் வீழ்ச்சியடைந்தது. அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையுடன் ஆரம்பமான இப்பொருளாதார நெருக்கடியின் விளைவாக சொற்ப காலத்தில் வெளிநாடுகளின் கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்கு உள்ளாகி இருப்பதாக இலங்கை உத்தியோகபூர்வமாக அறிவித்தது. அந்த சூழலில் நாட்டின் பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் உச்சநிலையை அடைந்திருந்தன.

ஆனால் 2022 ஆம் ஆண்டின் ஜுலைப் பிற்பகுதியில் நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார ரீதியில் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார். அந்த வேலைத்திட்டங்களின் பிரதிபலனாக பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் காணப்பட்ட நெருக்கடிகளும் பாதிப்புக்களும் பெரும்பாலும் நீங்கியுள்ளன.

பல துறைகளிலும் வளர்ச்சிகளும் ஏற்பட்டுள்ளன. அதில் ஓரங்கமாகவே வெளிநாட்டு கையிருப்பில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பும் விளங்குகிறது.

தற்போது இலங்கை அடைந்து வரும் பொருளாதார முன்னேற்றங்களின் பின்புலத்தில், பிரித்தானியா தமது பிரஜைகளுக்காக வெளியிட்டிருந்த இலங்கைக்கான பயண ஆலோசனையைப் புதுப்பித்துள்ளது. அதற்கேற்ப அவசரகால மருத்துவ சேவைகள், நாட்டுக்குள் பிரவேசிக்கும் போது பாதுகாப்புத் தேவைகள், வீதிப் பாதுகாப்பு, நாட்டின் பாதுகாப்பு நிலைமை, சுகாதார வசதிகளுக்காக அணுகல் ஆகிய பகுதிகளில் முந்திய தகவல்கள் புதுப்பிக்கப் ப ட்டிருக்கின்றன. அதன்படி உணவு, எரிபொருள் மற்றும் மருந்துத் தட்டுப்பாடு குறித்த முந்திய ஆலோசனையில் இருந்த தகவல்கள் இந்த புதுப்பிக்கப்பட்ட பயண ஆலோசனையில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. அத்தோடு மருத்துவ உபகரணங்கள் பற்றாக்குறை போன்ற சுகாதார சேவைகளில் உள்ள சவால்களும் நீக்கப்பட்டு இருக்கின்றன.

இதேவேளை ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் 27 ஆம் திகதி வரை 53 ஆயிரத்து 928 பிரித்தானிய உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். 2023 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதமும் இலங்கைக்கு வருகை தந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சம்படி பதிவான போதிலும், அது 2024 ஜனவரி முதல் மாதா மாதம் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்டதாகப் பதிவாகும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இவை யாவும் இலங்கை முன்னெடுத்துவரும் பொருளாதார மறுசீரமைப்புக்களின் பிரதிபலன்களே அன்றி வேறில்லை.

நாடு அடைந்துவரும் பொருளாதார முன்னேற்றங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். அதுவே நாட்டை நிலைபேறான அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல வழிவகுக்கும். அத்தோடு நாட்டில் மறுமலர்ச்சி ஏற்படவும் மக்களுக்கு வளமான பொருளாதார வாழ்வு கிடைக்கப்பெற்றிடவும் பொருளாதார ரீதியிலான முன்னேற்றங்கள் இன்றியமையாததாகும். அதனால் தற்போதைய பொருளாதார மறுசீரமைப்புக்கள் பெற்றுக்கொடுத்துள்ள முன்னேற்றங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். அதுவே அனைத்து மக்களதும் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# பொருளாதாரத்தை கட்டியெழுப்பவே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்

## அனுராதபுரம் மாவட்ட சட்டத்தரணிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி வலியுறுத்தல்

கட்சியின் தேவைக்கேற்ப நாட்டின் பொருளாதாரத்தை உருவாக்கவன்றி பொருளாதார ரீதியாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவே இந்நாட்டில் அரசியல் கட்சி அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கட்சிகளின் விருப்பத்திற்கேற்ப நாட்டின் பொருளாதாரத்தை முன்னெடுத்ததால் நாடு பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிட்டதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, மீண்டும் அவ்வாறானதொரு நிலை ஏற்படாதிருக்க பாரம்பரிய அரசியலில் இருந்து விடுபட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அனுராதபுரம் மாவட்ட சட்டத்தரணிகளுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.





அண்மைக்கால நிகழ்வுகள் காரணமாக நாட்டின் ஜனநாயகம் ஆட்டம் கண்டுள்ளது என்பதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்து நாட்டை முன்னெடுத்துச் செல்லுமாறு சட்டத்தரணிகளிடம் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கான கருத்துகளையும் ஆலோசனைகளையும் வழங்கிய சட்டத்தரணிகள், தமது தொழில்சார் கோரிக்கைகள் சிலவற்றையும் ஜனாதிபதியிடம் முன்வைத்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரிக்கைகள் பலவற்றிற்கு உடனடித் தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுத்ததுடன், அனுராதபுரம் சட்டத்தரணிகளின் தொழில் அந்தஸ்தை உயர்த்தும் வகையில் சட்டத்தரணி ஓய்வறையை நிர்மாணிப்பதற்கு பணம் ஒதுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "பாரம்பரிய அரசியலின் காரணமாகவே இந்த இக்கட்டான சூழலை நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதிலிருந்து நாம் வெளியேற வேண்டும். நாட்டின் தேவைக்கேற்ப கட்சி அமைப்பை மாற்றி அமைக்க வேண்டும். கட்சி அமைப்பின் விருப்பப்படி நாட்டை கட்டியெழுப்ப முடியாது. அதைச் செய்யப் போனதால்தான் கடந்த காலங்களில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதனை யாரும் பொறுப்பேற்கவில்லை. கடைசிவரை யாரும் ஆட்சி அமைக்க முன்வரவில்லை.

இது குறித்து முக்கிய கட்சிகள் ஒன்றுகூடி கலந்துரையாடுவது நல்லது என்று நான் நம்புகிறேன். பழைய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் அடிப்படையில் கிராமங்கள் கட்டியெழுப்பப்பட்டன. ஆனால் தற்போது பல புதிய கட்சிகள் உருவாகியுள்ளன. அடுத்த தேர்தலில் இதெல்லாம் மாறலாம். கட்சிகளைப் பற்றி சிந்திக்காமல் நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும். இல்லையேல் பிரிவுதான் ஏற்படும்.

மிகவும் மோசமான காலகட்டத்தை கடந்து வந்துள்ளோம். எங்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வீதியில் அடித்துக் கொல்லப்பட்டார். அந்த நிலைக்கு நாம் திரும்ப வேண்டுமா என்று எல்லோரிடமும் கேட்க விரும்புகிறேன். இதற்கு சில அரசியல்வாதிகளும் அங்கீகாரம் அளித்துள்ளனர். மனித உரிமைக்காக நிற்கும் சட்டத்தரணிகள் சங்கம் கூட இதைக் கண்டிக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அன்று கொல்லப்பட்டார். இந்த நாட்டில் ஜனநாயகம் எங்கிருந்தது என்பதை இன்று நாம் மறந்து விட்டோம்.

பிரதமரின் வீட்டை எரித்துவிட்டு வெளியேறச் சொன்னால், எதிர்க்கட்சிகள் பிரதமரை இராஜினாமா செய்யச் சொன்னால், நாட்டில் ஜனநாயகம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். இங்கிலாந்து போன்ற நாட்டில் இது நடந்தால் என்ன நடக்கும், எனவே இப்போது நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்த வேண்டும்.

எதிரணியில் இருந்த குமார வெல்கமவையும் காருக்குள் ஏற்றி, சிலர் தீவைக்க முயன்றபோது அங்கிருந்தவர்கள் அவரைக் காப்பாற்றினார்கள். அவர் திருடனும் அல்ல, கொலைகாரரும் அல்ல.

எனவே, நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும். அதன்போது நாம் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும். திருடர்களை தண்டிப்போம் என சில தரப்பினர் கூறுகின்றனர். நாங்கள் திருட்டுக்கு எதிரானவர்கள். கட்சிகளால் அவர்களைத் தண்டிக்க முடியாது.

கடந்த காலத்தில் நாட்டின் ஜனநாயகம் ஆட்டம் கண்டது. எனவே, நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயகத்தை சரியான பாதையில் கொண்டு சென்று நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன்.

சட்டத்தரணிகள் எழுப்பிய சில கேள்விகளுக்கும் ஜனாதிபதி பதிலளித்தார்.

கேள்வி: நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இவ்வேளையில், அரச நிறுவனங்களில் விரயத்தை குறைப்பதுடன், வருமானத்தை ஈட்டுவதும் அவசியமாகும். மில்லியன் கணக்கில் நட்டமடைந்து வரும் அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் செய்யும் கொள்வனவு மற்றும் கொள்முதல் ஏற்பாடுகளில் புதிய விதிகள் கொண்டுவரப்படுமா?

பதில்: அரச நிறுவனங்களில் இடம்பெறும் வீண்விரயத்தை ஒழிக்கும் திட்டத்தை ஏற்கனவே தொடங்கியுள்ளோம். இதுபற்றி விசாரித்து அறிக்கை அளிக்க பல பாராளுமன்றக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. மேலும், நிபுணத்துவ அறிவைப் பெற்று அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. சில விடயங்களுக்கு பல திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் உள்ளன. எனவே, ஒட்டுமொத்த அரச கட்டமைப்பையும் மாற்ற வேண்டும். அத்துடன், எதிர்காலத்தில் மாகாண சபைகளுக்கு பரந்தளவிலான பணிகளை கையளிக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றோம். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கே நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும். எனவே, அடுத்த சில ஆண்டுகளில் இத்திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம்.





அமைச்சர் மனுஷ நாணாயக்கார, இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க, முன்னாள் அமைச்சர் பி. ஹரிசன், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் பாலித ரங்கே பண்டார, ஜனாதிபதி பணிப்பாளர் நாயகம் (சமூக விவகாரங்கள்) ரஜித கீர்த்தி தென்னகோன், ஜனாதிபதி தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய, வடமத்திய மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சட்டத்தரணி கஸ்தூரி அனுராதநாயக்க மற்றும் அனுராதபுரம் சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக நாம் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும்!**

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

# அரசியல் ரீதியில் பல்வேறு நெருக்கடியான தருணங்களில் விஜயதாச ராஜபக்ஷ நாட்டுக்காக என்னுடன் இணைந்தார்

## ஜனாதிபதி சட்டத்தரணி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவின் 'சட்டத்தரணி வாழ்வின் 40ஆவது ஆண்டு' நிறைவை முன்னிட்டு நடைபெற்ற வைபவத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

அரசியல் ரீதியில் பல்வேறு நெருக்கடியான சூழ்நிலைகளில் விஜயதாச ராஜபக்ஷ நாட்டிற்காக தன்னுடன் இணைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவின் சட்டத்தரணி வாழ்வில் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.







விஜயதாச ராஜபக்ஷவிடம் பயிற்சி பெறும் மற்றும் பயிற்சி பெற்ற கனிஷ்ட சட்டத்தரணிகளால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை அரசியலிலும் சட்டத்துறையிலும் தனித்துவமான பங்களிப்பை வழங்கும் விஜயதாச ராஜபக்ஷ, இலக்கியவாதி, எழுத்தாளர், பாடலாசிரியர் மற்றும் கலைஞராக ஆற்றிய பணிகளுக்காக இதன்போது ஜனாதிபதியினால் பாராட்டப்பட்டார்.

1977 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக பாராளுமன்றத்திற்கு பிரவேசித்த போது விஜயதாச ராஜபக்ஷவை சந்திக்கும் சந்தர்ப்பம் தமக்குக் கிடைத்ததை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, அவர் அப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் திறமையான வேட்பாளராக இருந்ததாகவும் குறிப்பிட்டார்.

நீதியமைச்சர் என்ற வகையில் தற்போது அவர் பல சட்டமூலங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவரின் எதிர்கால தொழில் பணிகளுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

தனது 40 வருட சட்டத்தரணிப் பயணத்தை நினைவுகூர்ந்து இங்கு உரையாற்றிய அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, இவ்வாறானதொரு நிகழ்வை ஏற்பாடு செய்ததற்காக தனது கனிஷ்ட சட்டத்தரணிகள் உட்பட சட்டத்துறையினருக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

40 வருடங்கள் கொழும்பு நீதித்துறை வளாகத்தில் சட்டத்தரணியாகவும், ஜனாதிபதி சட்டத்தரணியாகவும் அவர் பணியாற்றியுள்ளதுடன், சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராகவும் ஒரு அரசியல்வாதியாக பாராளுமன்ற உறுப்பினராகவும் கோப் குழுத் தலைவராகவும் பல்வேறு அரசாங்கங்களின் கீழ் பல அமைச்சுகளில் அமைச்சரவை அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.

விஜயதாச ராஜபக்ஷ அவர்கள் சட்டத்துறையில் ஆற்றிய சேவையைப் பாராட்டி கனிஷ்ட சட்டத்தரணிகளினால் நினைவுப் பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

அமைச்சர்கள், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், இராஜதந்திரிகள், உயர்நீதிமன்ற நீதியரசர்கள், நீதிபதிகள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் அதிகாரிகள் மற்றும் சட்டத்தரணிகள், விஜயதாச ராஜபக்ஷவின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் உட்பட அதிதிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

# கலையுலகம் வழங்கிய மாபெரும் கலைஞர் கமலினி செல்வராசன்

**அமரரின் ஒன்பதாம் ஆண்டு நினைவுநாள் இன்று**

தமிழ் வித்துவப் பரம்பரையில் பிறந்து, வளர்ந்த கமலினி இயல், இசை, நாடகமென முத்தமிழில் ஈர்க்கப்பட்டு கலைக்கே தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர். பல்துறைத் திறமைகள் கொண்ட சில்லையூர் செல்வராசன் மீது கொண்ட பெருமதிப்பு படிப்படியாய் பாசமாய், நேசமாய், காதலாய் மலர்ந்து பின்னர் திருமணத்தில் முடிந்தது. கலையுலகும் தமிழுலகும் தந்த மாபெரும் கலைஞர் கமலினி செல்வராசன் எம்மை விட்டு மறைந்து ஆறு வருடங்கள் நிறைவு பெறுகின்றன.

கமலினி செல்வராசன் என்ற பெயரை இலங்கை வானொலி, தேசிய ரூபவாஹினி தொலைக்காட்சியின் தமிழ் நேயர்கள் மறந்து இருக்க முடியாது. நாடு அறிந்த அறிவிப்பாளராக மாத்திரம் அன்றி இலக்கியவாதியாக, நடிகையாக பரிணமித்தவர்.



நான் இ.ஒ.கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்தபோது 70,80 களில் கமலினி அவர்களுடன் பழக்கம் உண்டு. நானும், கமலினியும் பல வானொலி நாடகங்களில் நடித்திருக்கின்றோம். நான் நாயகன், அவர் நாயகி. குறிப்பாக மூன்றுநாடகங்கள் நினைவுக்கு வருகின்றன.

ஒன்று 'தலைமுறைஇடைவெளி' மற்றையது 'வெள்ளோட்டம்' அடுத்தது 'கிருகப்பிரவேசம்.'

மூன்றுமே அராலியூர் சுந்தரம் பிள்ளை எழுதியது. தயாரித்தவர் ஜோர்ஜ் சந்திரசேகரன்.

நாங்கள் ஒத்திகை பார்க்கும் போது சில்லையூர் அண்ணன் வந்து நகைச்சுவையாகப் பேசுவதுண்டு. கமலினியின் இனிய குரலிலும், குழந்தைக் குணத்திலும் எல்லோரும் கட்டுண்டதுண்டு. நாங்கள் நடித்த அந்த நாடகங்களின் பிரதிகளை, எங்களோடு நடித்த சிறந்த நடிகை சகோதரி ஏ.எம்.சி ஜெயசோதி வைத்திருந்தார். 2018 இல் நான் இலங்கை சென்றபோது அவற்றை அவரிடமிருந்து வாங்கி பிரதி எடுத்துக் கொண்டு வந்தேன்.

எல்லோராலும் ரசிக்கப்பட்ட,நேசிக்கப்பட்ட அன்பு சகோதரி அமரர் கமலினி செல்வராசனின் புகழ் என்றும் வாழும்.

கோவிலூர் செல்வராஜன்...

## மானுடவியல்


160

சிதசித்துப்பிரபஞ்சங்களெங்கும் வியாபித்திருக்கின்ற உமாதேவியார் ஞானப்பாலூட்ட உண்ட திருஞானசம் பந்த மூர்த்தி வந்தார். வேதாகமாதி சமஸ்த சாத்திரங்களையும் ஓதாது ணர்ந்த முத்தமிழ் விரகர் வந்தார்" என்று ஊதவும், சென்று, திருவரத் துறையை அடைந்து, கோபுர வாயி லுக்குத் தூரத்திலே முத்துச்சிவிகையி னின்றும் இறங்கி, நமஸ்கரித்து எழுந்து, திருக்கோயிலினுள்ளே பிரவேசித்து, வலஞ்செய்து சந்நிதானத்திலே நமஸ்கரித்து, திருப்பதிகம் பாடி சில நாள் அந்தஸ்தலத்தில் எழுந்தருளியிருந்தார். இருக்குநாளிலே, திருநெல்வெண் ணெய் முதலிய தலங்களுக்குப் போய், சுவாமி தரிசனஞ்செய்து கொண்டு திரும்பினார்.

திருஞானசம்பந்த மூர்த்திநாயனார், சில நாளாயினபின், சீர்காழிக்குத் திரும்பும்படி திருவுளங்கொண்டு, அத்திருவரத்துறையில் வீற்றிருக்குங்கட வுளை வணங்கி விடைபெற்று, முத்துச்சிவிகையில் ஏறிச்சென்று, திருப்ப ழுவூர், திருவிசயமங்கை, திருவைகா, திருப்புறம்பயம் என்னுந்தலங்களை வணங்கிக் கொண்டு, திருசேய்ஞலூரின் எல்லையை அடைந்து, அது சண்டேசுரநாயனார் திருவவதாரஞ்செய்த திருப்பதியாதலால் முத்துச்சிவி கையினின்று இறங்கி, அத்திருப்பதியினுள்ளே நடந்து போய், ஆலயத்திலே பிரவேசித்து, சுவாமிதரிசனஞ் செய்து"பீரடைந்தபால தாட்ட" என்னுந் திருப்பதிகம் பாடினார். பின்பு, திருப்பனந்தாள், திருப்பந்தணைநல்லூர், திருவோமாம் புலியூர், திருவாளொளிபுற்றூர், திருக்கடம்பூர், திருநாரையூர், திருக் கருப்பறியலூர் என்னுந் தலங்களை வணங்கிக் கொண்டு சீர்காழிக் குச் சமீபத்திலே போனார்.



*(தொடரும்)*

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# பலருக்கும் நன்மையாகவே மலரும் குரோதி வருஷம்

## 12 ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் குருவுடன் உச்ச சூரிய சேர்க்கையின் அரிதான நிகழ்வு

சூரியன் தன் பயணத்தை, கிழக்கில் ஆரம்பிக்கும் நாள் தான், தமிழ் புத்தாண்டாக கொண்டாடப்படுகிறது. மங்களகரமான ஸ்ரீகுரோதி வருட தமிழ்ப் புத்தாண்டு வருட பிறப்பு 1404 2024 சித்திரை திங்கள் 01 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறும். ஸ்ரீசோப கிருது ஆண்டு பங்குனி மாதம் 31ம் நாள் சனிக் கிழமை இரவு மணி 8.10 க்கு ஸ்திர துலா லக்கினத் தில் சனி ஓரையில் முடிவடைந்த பிரகு, தமிழ் (ஸ்ரீ க்ரோதி நாம சம்வத்சரம்) புத்தாண்டான குரோதி பிறக்கிறது.





**ஸ்ரீகுரோதி வருட தமிழ்ப் புத்தாண்டு**

ஞாயிற்றுக்கிழமை, வளர்பிறை சஷ்டி திதியில், திருவாதிரை நட்சத்திரம், மிதுன ராசி, அதிகண்ட யோகம், தைதுளை கரணத்தில் குரோதி தமிழ் வருட பிறப்பு உதயமாகிறது. சித்திரை மாதம் சூரியன் மேஷத் தில் உச்சமாகி அமர்கிறர். இந்த ஆண்டு புத்தாண்டின் சிறப்பு என்னவென்றால், குருவும் சூரியனுடன் அமர்ந்துள்ளார் என்பதுதான். ஏனென்றால், இது மிகப்பெரிய அரிய கோச்சார அமைப்பு.

குருவுடன் உச்ச சூரிய சேர்க்கை என்பது அரிதான நிகழ்வு, இது 12 ஆண்டுக்கு ஒரு முறையே நடைபெறும் என்பதால், இந்த குரோதி புத்தாண்டு பலருக்கும் நன்மையாகவே மலரும். குரு சூரியன் இணைவு, சூரியனால் ஏற்படும் பல தோஷங்களை நீக்கிவிடும். சூரியன் உச்சமாகும் நிலையில் அவருடன் குருபகவான் உள்ளதால் ஆரோக்கியம் மேம்படும். அறிவு கூர்மையாகும். குழந்தை பேரு சிறக்கும். நிர்வாகத்திறன் மேம்படும்.

ஸ்ரீகுரோதி வருஷம் வெண்பா "அறுபது வருட வெண்பா" என்று தமிழ் ஆண்டுகள் தொடர்பான வெண்பா இடைக்காடர் என்ற சித்தரால் பாடப்பட்டது. ஸ்ரீ குரோதி தமிழ் புத்தாண்டு 60 ஆண்டுகளில் 38வது ஆண்டு ஆகும்.

"கோரக் குரோதி தனிற் கொள்ளி மிகுங் கள்ளரினால் பாரிற் சனங்கள் பயமடைவார் கார்மிக்க அற்பமழை பெய்யுமே மஃகங்குறையுமே சொற் ப வி ளை யு ண் டெ ன வே சொல்".

**ஸ்ரீகுரோதி வெண்பா விளக்கம்**

குரோதி தமிழ் ஆண்டு கோரமான வருடம். எங்கும் கொள்ளை களவு பகை பெருகும் என்று இந்த வெண்பா கூறுகிறது. திருடர்கள் மக்களை தாக்குவார்கள், பயம் மிகுதியாகும். மழை குறைவாகவே பொழியும் என்பதால் உணவுப் பொருள் பஞ்சம் ஏற்படும் என்று குரோதி வருட பஞ்சாங்க வெண்பா கூறுகிறது.




# ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையார் ஆலய உற்சவம்

ஆறு, கடல், குளம், வயல், மரச் சோலைகள் போன்ற இயற்கையி னால் சூழப்பட்டு படுவான்கரை எழுவான்கரையை இணைக்கும் மத்திய நிலையமாக விளங்கும் களுவாஞ்சியூரில் கடற்கரை வீதியில் பன்னெடுங்காலமாக வீற்றிருந்து வேண்டுவோர்க்கெல்லாம் அருள் பாலிக்கும் ஸ்ரீ வம்மியடிப்பிள்ளை யாரின் வருடாந்த அலங்கார உற்சவம் பங்குனி வளர்பிறை சதுர்த்தி நாளை தீர்த்த நாளாகக்கொண்டு 06.04.2024 ம் திகதி வாஸ்து சாந்தியுடன் 07.04.2024ம் திகதி ஆரம்பமாகியது. இவ்வுற்சவம் அலங்கார உற்சவத்துடன் ஆரம் பித்து 11.04.2024ம் திகதி அன்று விஷேட சங்காபிஷேகத்துடன் அலங்கார உற்சவமும் நடைபெற்று 12.04.2024 ம் திகதி அதிகாலை பங்குனி வளர்பிறை சதுர்த்தி தினத் தில் தீர்த்த உற்சவத்துடன் நிறைவுறும். அன்று திருப்பொன்னூஞ்சல் நிகழ்வும் இடம்பெறும்.

தெய்வத்திரு சிவஸ்ரீ பஞ்சாச்சரக்குருக்கள், புவனேசராசா குருக் கள் ஆகியோரின் அருளாசியுடன் சிவஸ்ரீ.சு.கு.விநாயகமூர்த்தி குருக்களினதும் சிவஸ்ரீ க.கு.மோஹானந்த குருக்களினதும் நல்லாசிகளுடன் பிரதம குருவாக சிவஸ்ரீ பு.கு.சடாட்சர சர்மா (களுதாவளை சுயம்புலிங் கப்பிள்ளையார் ஆலயம் மற்றும் வம்மியடி பிள்ளையார் ஆலயம்) உதவிக்குருவாக சிவஸ்ரீ.உ.மதுசூதனன் சர்மாவும் (ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையார் ஆலயம்) சிறப்பான முறையில் அலங்கார உற்சவத்தை நடாத்தவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை ஆலய பரிபால சபையினர் முன்னெடுத்துள்ளனர்

அருள்மிகு ஸ்ரீ வம்மியடிப்பிள் ளையார் ஆலய தோற்றமானது முதல்முதலில் கணபதி ஐயரால் ஆரம்பித்து வழிபட்ட ஆலயம் ஆகும். இவர் மரப்பொந்து ஒன்றிலிருந்து கல்வடிவத்தில் விநாயகரை கண்டெடுத்திருந்தார். அக்கல்லினை வைத்து வழிபட்டபோது அச்சிலைக் கல்லானது களவாடப்பட்டதினால் கணபதி ஐயர் மிகுந்த கவலை கொண்டு இருந்தார்.

அவ்வேளை விநாயகர் அவரின் கனவில் தோன்றி கவலைப் பட வேண்டாம். மூன்று கல்லை வைத்து என்னை எண்ணி வழிபடு நான் உன்னுடன்தான் இருப்பேன் எனக்கூறியதற்கு அமையவே கணபதி ஐயர் வம்மிமரப்பொந்தில் வைத்து வழிபட்டு வந்ததாக பழம் பெரும் கதைகள் சித்தரிக்கின்றன. வம்மிமரப் பொந்தில் வைத்து வழிபட்டதனாலே இவருக்கு வம்மியடிப் பிள்ளையார் எனப் பெருநாமம் பெற்றமையாகும்.



கோயில் அமைந்திருந்த இடமானது மூதுரைச் சேர்ந்த வா மாணிக்கம் என்பவருக்கு சொந்தமான காணியாகும். எனவே இவருடைய வளவிற்குள்ளேயே கணபதி ஐயர் விநாயகரின் வழிபாடு மேற்கொண்டிருந்தார். கணபதி ஐயர் சமாதிநிலையை அடைந்ததும் அவரின் வேண்டுகோளுக்கு இணங்கவே அவரின் சாமாதி உடலானது கோவில் அமைந்திருந்த இடத்திலேயே புதைக் கப்பட்டது. அச்சமாதியானது தற்போதும் ஆலயத்தில் காணப்படுவதும் பூசை நடைபெறுகின்ற போது அச் சமாதிக்கும் பூசைசெய்து வழிபடுவதும் ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தில் தொன்மைமிக்க வரலாற்றை செப்பி நிற்கின்றன

கணபதி ஐயரின் மறைவிற்குப் பின்னர் அக்கோவிலின் மூலஸ்தான மண்டபமானது சாமித்தம்பியால் அமைக்கப்பட்டிருந்ததுடன் வெளி மண்டபமானது வைரவர் கோயில்கள் யாவும் முருகுப்பிள்ளையால் அமைக்கப்பட்டது இவர்கள் கணபதி ஐயரின் வழி வந்தவர்களே.

இவ்வாலயம், பன்னெடுங்காலமாக கட்டிடமாகவே காணப்பட்டது 1978 ஆம் ஆண்டு சூறாவளி அனர்த்தம் காரணமாக சிறுசேதத்திற்கு உட்பட்ட போது கோயில் மீண்டும் புனரமைக்கப்பட்டது. இக் கோயிலை பெரிதாக புனரமைக்கும் நோக்கில் தா. நமசிவாயத்தால் நிதியொழுங்கு செய்யப்பட்டு அதன் தொடர்ச்சியாக ஆலயத்தை சார்ந்த குடும்ப அங்கத்தவர்களால் நிதியுதவிகள் செய்ததுடன் 2006ஆம் ஆண்டில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்ற போது அங்கு இரண்டு ஆலயங்கள் மாத்திரமே அமைக்கப்பட்டிருந்தன. அதாவது ஆதிமூலப் பிள்ளையார் கோயில் மற்றயது புதிதாக அமைக்கப்பட்ட பிள்ளையார் கோயில் ஆகும். இதன் பின்னர் வைரவர் கோயில் அமைக் கப்பட்டதுடன் தற்போது (2022) மேலதிகமாக வசந்த மண்டபமும் மற்றும் நாகலிங்கேஸ்வரர் ஆலயம், நவக்கிரக கோயில், சிவன், உமை போன்றோருக்கும் கோவிலமைக்கப் பட்டது.

இக்கோயிலின் ஆரம்பகாலத்தில் இருந்து தற்போது வரைக்குமான பூசகர்களை நோக்குகின்றபோது முதலில் கண்பதிஐயர், பஞ்சாட்சரக் குருக்கள், சுப்பிரமணியக் குருக்கள், மு. பத்மநாதன்குருக்கள் (சின்னவன் குருக்கள்) , முருகுப்பிள்ளைக் குருக்கள், ஜெகதீஸ்வரன் குருக்கள் அதன் பின் சபாநாயகம் குருக்கள் என கடமையாற்றி தற்போது பஞ் சாச்சரக்குருக்களின் பேரனும் புவனேசராசாக்குருக்களின் மகனாகிய சடாச்சர சர்மாவும் சேவையாற்றி வருகின்றார்.

பக்தர்கள் எக்காரியத்தை ஆரம்பிப்பதனாலும் வம்மியடிப்பிள்ளையாரின் நம்பிக்கை கொண்டு தேங்காய் நேர்த்தி வைத்து ஆதிகாலமாக வழிபட்ட ஆலயத்தின் முன்னே கட்டுவார்கள். மற்றும் காசி நேர்த்தி வைத்து கட்டுவார்கள் கருவறைக்குப் பின்புறமாக கல் நேர்த்தி வைத்து வழிபடுவார்கள். இவைகள் யாவும் தாங்கள் நினைக்கும் காரியங்கள் நிறைவேறும் என்ற நம்பிக்கையில் அவ்வாறு நேர்த்தி வைத்து வழிபடுகின்றனர். இதன் சிறப்பாக பக்தர்களுகெல்லாம் ஸ்ரீ வம்மியப்பிள்ளையாரின் அருளும் ஆசியும் என்றென்றும் கிடைத்த வண்ணமே இருக்கின்றன.

***நாராயணபிள்ளை நாகேந்திரன்***
ஓய்வுநிலை அதிபர்
களுவாஞ்சிகுடி

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 83



உறுதியான நிலைப்பாடு இல்லாமலும். ஒருமுகப் படுத்திய மனநிலைமை இ ல் ல ா மை யி ன ா லு ம் மனிதன் பலவிதமான இன்னலுக்கு ஆளாகிறான். இதனால், தன் ஆற்றல் முழுவதையும் இழக்கிறான். எந்த ஒரு செயலிலும் வெற்றியடைய, ஒருமுகப் படுத்தப்பட்ட ஆற்றல் மிகவும் இன்றியமையாதது ஆகும்.

வெற்றி அடைவதில் உறுதி கொள்ள வேண்டும். தெளிவான ஒரு முடிவு எடுத்த பின் அதை நிறைவேற்றுவதில் நம் ஆற்றல் முழுவதையும் செலவிட வேண்டும். எந்த ஒரு செயலையும் முடிவெடுப்பதற்கு முன் தனது நலம் விரும்பிகள். நண்பர்கள். அறிவு ஜீவிகள் என பலரிடமும் எத்தனை முறை வேண்டுமானாலும் ஆலோசிக்கலாம். ஆனால் முடிவெடுத்த பின்னர், தயங்காமல் அச்செயலை முடித்து வெற்றி காண்பது ஒன்றே தன் முழு மூச்சாகக் கொள்ள வேண்டும். தனது தகுதி. தன்னுடைய திறமை ஆகியவற்றின் அடிப்படையில் தன்னம்பிக்கையுடன் செயல் புரிந்தால் வெற்றி நிச்சயம்.

இவ்வாறு தாம் மேற்கொண்ட செயல்களை துணிச்சலுடனும், கொள்கை உறுதியுடனும் தன்னம்பிக்கையுடனும். ஆண்மையுடனும் நிறைவேற்ற கடமையாகும். அதன் பலனை ஆண்டவனிடத்தில் விட்டுவிட செயல்படுத்துவது மட்டுமே நம் வேண்டும். கடவுள் நிச்சயம் நமக்கு முன்னேற்றத்தை தருவார். நாம் விரும்பிய வாழ்க்கையை நமக்குத் தருவார்.

சுயநலத்துடன் தனக்காக மட்டுமே வாழ்வது என்பது. மனித வாழ்க்கைக்கு உகந்தது ஆகாது. சுயநலத்துடன் பிறந்து, சுய நலத்துடன் வளர்ந்து, தான் மட்டுமே உண்டு. உடுத்தி வாழ்பவன் வாழ்க்கையில் வெற்றி பெற்றது போல் தெரிந்தாலும், உண்மையில் அவன் தோற்றுப் போனவனே ஆவான்.

மற்றவர்களுக்கு உதவி புரிந்து வாழ்வதே. இப்படைப்பின் நோக்கமாகும். நீர்கடலிருந்து நீராவியாகி, மழை தரும் மேகம் உருமாறி தவித்த பூமிக்கு மழையாக பொழிந்து, பிறர் நலம் பேணுகிறது. பூமியில் பெய்த மழைநீர் நதிகளாகி, கடலின் மகத்துவத்தை உணர்ந்து அதனுடன் சங்கமிக்கின்றன. மற்றவர்களை இன்பமூட்டவே காற்றும் செயலாற்றுகிறது. சூரியன். சந்திரன். நக்ஷத்திரங்கள் அல்லும் பகலும் ஒளிவீசுவதும் தனக்காக அல்ல: பிறருக்காக இவ்வாறு இயற்கைகள் யாவும், பிறர் நலம் பேணும் போது மனிதன் மட்டும் சுயநலத்துடன் செயல்படுவது தகுமா?

**(தொடரும்)**

# அறநெறி அறிவுநொடி



## கே. ஈஸ்வரலிங்கம்
### தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19965. எந்தெந்த நாட்களில் வாசலில் கோலம் போடக்கூடாது?**
அமாவாசை, தவசம் ஆகிய நாட்களில்

**19966. திருமணமான பெண்கள் எத்தனை விரலில் மட்டுமே மெட்டி அணிய வேண்டும்?**
ஒரே ஒரு விரலில் மட்டுமே

**19967. கர்ப்பமான பெண்கள் எந்த கோவிலுக்கு போகக்கூடாது?**
உக்ர தேவதைகள் இருக்கும் கோவிலுக்கு

**19968. எந்தெந்த நாட்களில் பாகற் காயை சமைக்க கூடாது?**
வெள்ளிக்கிழமைகளில், விஷேச நாட்களில் (பண்டிகை நாட்களில்)

**19969. அவ்வாறு செய்வதால் என்ன?**
பாவம் வந்து சேரும்.

**19970. ஏகாதசிக்கு மறுநாள் என்ன?**
துவாதசி.

**19971. துவாதசி திதியின் விசேசம் என்ன?**
மகாவிஷ்ணு பூமியில் எழுந்தருள்வதாக நம்பப்படுகிறது.

**19972. ஏகாதசி திதியில் விரதம் இருப்பதன் மூலம் என்ன நன்மை?,**
மோட்சத்தை அடையலாம் என்பது ஐதீகம்.

**19973. ஏகாதசி விரதம் வேறு என்ன செய்யும்?**
பாவங்களைப் போக்கும் என நம்பப்படுகிறது

**19974. ஏகாதசி திதி யாருக்கு உகந்ததாக கருதப்படுகிறது?**
மகாவிஷ்ணுவுக்கு

**19975. எனவே, அன்றைய தினம் என்ன செய்யலாம்?**
விரதம் இருந்து விஷ்ணுவை வழிபடுவது மிகவும் சிறப்பு வாய்ந்தது.

# கெத்தாரமை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய தேர்த் திருவிழா

கொழும்பு 14, கிரேண்ட்பாஸ், கெத்தாரமை சர்வதேச கிரிக் கெட் மைதானத்திற்கு அருகில் அமைந்திருக்கும் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் (முனியப்பர் ) ஆலயத்தின் 12ஆவது ஆண்டு வருஷாபிஷேக பெருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இவ்வாலயத்தில் நாளை 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை7 மணிக்கு கொழும்பு 12, ஆமர் வீதி பெரடைஸ் பிளேஸ் ஸ்ரீ பத்ரகாளியம்மன் திருக்கோவிலிருந்து பாற்குட பவனி ஆரம்பமாகும். இந்த பாற்குடபவனி ஆமர்வீதி, கிரேண்ட்பாஸ் வீதி, டொக்டர் பாபபுள்ள பிளேஸ் வழியாக ஆலயத்தை அடைந்ததும் அம்பாளுக்கு 1008 சத சங்காபிஷேகம், பாலாபிஷேகம் என்பன நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்படும். எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து ரதபவனி இடம்பெறும். எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 6 மணிக்கு திருவூஞ்சல் திருவிழாவும் கொடியிறக்கமும் இடம்பெறும். எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு பூங்காவனமும் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு வைரவர் மடையும் இடம்பெறும்.



# இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டாரவுடன் இந்திய தேசிய லீக்கின் மாநில செயலாளர் சந்திப்பு



ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி கட்சித் தலைவர் மௌலவி சதீக் முப்தியின் அழைப்பை ஏற்று கடந்த வியாழக் கிழமை இந்தியா விலிருந்து இலங் கைக்கு வருகை தந்துள்ள இந்திய தேசிய லீக்கின் தமிழ் நாட்டு மாநிலத்தின் செயலாளர் முகமது கான் வெகுசன ஊடக மற்றும் தபால் சேவை இரா ஜாங்க அமைச்சர் சாந்த பண்டா ரவை அமைச்சில் வைத்து சந்தித்து சமகால அரசியல் நிலவரம் குறித்து கலந்துரையாடினார். இதன் போது இலங்கை மாணவ மாணவிகளுக்கு இந்திய மருத்துவ கல்லூரிகளில் கல்வி கற்க புலமைப் பரிசில் வழங் குவதாகவும் வட, கிழக்கு முஸ்லிம் களின் மீள் குடியேற்ற வீட்டுத்திட்ட உதவித் திட்டத்திற்கு தங்களால் முடிந்த அனைத்து உதவிகளையும் வழங்க இந்தியா தயாராக உள்ளதா கவும் இந்திய தேசிய லீக்கின் தமிழ் நாட்டு மாநிலச் செயலாளர் முகமது கான் இதன்போது தெரிவித்தார்.

இனம், மதம் பாராது சகலருக் கும் சேவைபுரிந்து வரும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பி னரும் வெகுசன ஊடகம் மற்றும் தபால் சேவை இராஜாங்க அமைச் சருமான சாந்த பண்டாரவை அவர் பொன்னாடை போர்த்தி கௌரவித் தார். அருகில் ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி கட்சியின் தலைவர் மௌலவி சதீக் (முப்தி) நிற்பதை யும் படத்தில் காணலாம்.





கம்பளை திருவருள் மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவில் இரண்டாம் ஆண்டு வரு ஷாபிஷேகமும், அஸ் டோத்தர சத (108) சங்காபிஷேகமும் அண் மையில் இடம்பெற்றது.
படங்கள் நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

## JVP அநுரவின் யாழ். உரை...

கரிசனையுடனேயே அவர் பேசியி ருக்கின்றார் எனவும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், பாராளு மன்ற உறுப்பினருமான எஸ். சிறிதரன் விசனம் வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வியாழக் கிழமை (04) நடைபெற்ற இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வட மாகாண மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய தேசிய மக்கள் சக்தி யின் தலைவரும், பாராளுமன்ற உறுப் பினருமான அநுரகுமார திஸாநாயக்க, 'எமக்கு வாக்களியுங்கள் என்றோ, 13 பிளஸ் தருகின்றோம் அல்லது சமஷ் டியை தருகின்றோம் எமக்கு வாக் களியுங்கள் என்றோ கூறுவதற்காக நான் இங்கு வரவில்லை. வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற பிரதேச பேதங் களும், இன, மத பேதங்களுமின்றி நாம் அனைவரும் கூட்டு முயற்சியு டன் ஒன்றிணையவேண்டும். நாட்டை புதியதொரு பாதையில் கொண்டு செல்லவேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை முன்னிறுத்தி ஒன்றிணைந்து அர சாங்கத்தை அமைக்க முன்வருமாறு வடக்கின் அரசியல் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன்' என்று தெரி வித்தார்.

அநுரகுமார திஸாநாயக்கவின் உரையில் தமிழர்களுக்கான நம் பிக்கை ஒளிக்கீற்று எதுவும் தென்பட வில்லை எனவும், மாறாக, ஏனைய சிங்களத் தலைவர்களை விடவும் தமிழர் நலன்கள் தொடர்பான மிகக் குறைந்தளவிலான கரிசனையுட னேயே அவர் பேசியிருக்கின்றார் எனவும் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று யுத்தம் தீவிரமடைந் திருந்த காலகட்டத்தில் சுமார் 40,000 இராணுவ வீரர்களை இணைத்தமை, இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட வடக்கு, கிழக்கு இணைப்பை பிரிப்பதில் முன்னின்று செயற்பட்டமை, யுத்தத்தில் ஆயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட் டபோது அதுகுறித்து குறைந்தபட் சம் அனுதாபம் கூட வெளியிடாமை போன்ற பல்வேறு பிரச்சினைக்குரிய விடயங்கள் அநுரகுமார திஸாநாயக்க தரப்பில் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தின்...

மேற்கொள்வதற்கு பொலிஸாரை வரவழைக்க வேண்டியுள்ளதாகவும் எனினும் கட்டடத்தை திறக்கும்வரை பொலிஸார் அதற்காக காத்திருப்ப தாகவும் நிஹால் தல்துவ தெரிவித் துள்ளார்.

அந்த கட்டடத்தின் கதவை பலவந் தமாக திறக்கவேண்டிய அவசியம் பொலிஸாருக்கு கிடையாதென்றும் அந்தக் கட்சியின் இரு தரப்பினருக்கி டையில் காணப்படும் மோதலே இந்த நிலைக்கு காரணமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குற்றச்செயல்கள் இடம்பெற்றிருந் தால் மட்டுமே பொலிஸார் விசார ணைகளை மேற்கொள்வர். அந்த வகையில் மோதல்கள் இடம்பெறுமா னால் அதனைத் தடுத்து பாதுகாப்பு வழங்குவதையே பொலிஸார் மேற் கொள்வர் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தின் கதவு மூடியுள்ளதை நாம் 06 ஆம் திகதி காலை 9.30 மணிக்கே கேள்விப் பட்டோம்.

மாவட்ட மற்றும் தொகுதி அமைப் பாளர்கள் சிலர் அங்கு வந்து கூட்டம் நடத்தவேண்டுமென கூறி அதற் காக கட்டடத்தை திறந்துதருமாறு கோரியபோதே கதவு மூடியுள்ளதை காணமுடிந்தது. எனினும் அவர்கள் பொலிஸார் அதற்கு அனுமதி வழங்க வில்லையென்று தெரிவித்துள்ளனர்.

அந்த சமயம் தலைமையகத்தின் முன்னால் கூடிய அவர்கள் எதிர்ப்பைத் தெரிவித்ததுடன் அச்சமயம் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சாரதி துஷ் மந்த மித்ரபால, தஹம் சிறிசேன ஆகியோர் உள்ளிட்ட தரப்பினர் அங்கு வந்ததுடன் இருதரப்பினருக்குமிடை யில் வாய்த்தர்க்கங்கள் இடம்பெற் றன. பின்னர் அதுதொடர்பில் கருத் துத் தெரிவித்த துஷ்மந்த மித்ரபால கட்சியின் முக்கியமான ஆவணங்கள் காணாமற் போயுள்ளதாகவும் அர சாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வகிப்போரின் தேவைக்காக கட்சியை சிதைப்பதற்கு இடமளிக்கமுடியாதென் றும் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் கட் சியின் முக்கியஸ்தர்கள் எவரும் இல்லாத சந்தர்ப்பத்தில் இனந்தெரி யாத குழுவொன்று கட்சியின் தலை மையகத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி ஆவணங்களை எடுத்துச் சென்றுள்ளதாகவும் அவர் தெரி வித்துள்ளார். அதுதொடர்பில் தாம் மருதானை பொலிஸார் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

## இலங்கைக்கு ஆயிரக்கணக்கான...

தொடர்பான இந்த தீர்மானம் எடுக் கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியி டப்பட்டுள்ளன.

விலைவாசி அதிகரிப்பை கட்டுப் படுத்தவும், உள்நாட்டுச் சந்தையில் அதிகளவில் வெங்காய கையிருப்பை வைத்திருப்பதையும் நோக்கமாகக் கொண்டே இந்திய அரசு வெங்காய ஏற்றுமதிக்கு தற்காலிக தடை விதித் துள்ளது.

எனினும் தற்போது இலங்கைக்கு பெரிய வெங்காயத்தினை ஏற்றுமதி செய்ய இந்தியா தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டை வெற்றியடையச் செய்யும்...

அந்தப் பயணத்துடன் முன்னோக் கிச் சென்று நாட்டை வெற்றியடையச் செய்யும் பொறுப்பு இளைஞர்களிடம் உள்ளது எனத் தெரிவித்த ஜனாதிபதி, கோஷங்களிலும் வாதப் பிரதிவாதங்களி லும் மூழ்கி நாட்டின் எதிர்காலத்திற்கான வேலைத்திட்டத்தை மறந்துவிடக் கூடாது என்றும் வலியுறுத்தினார். அநுராதபுரம் மாவட்ட இளைஞர் மாநாடு (06) பிற்ப கல் நடைபெற்றது. “என்னில் இருந்து ஆரம்பிப்போம்” எனும் தொனிப்பொரு ளில் நடைபெற்ற இம்மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனா திபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். கூம்பிச்சாங்குளம் அருகில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் அநுராதபு ரம் மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவான இளைஞர்கள் கலந்து கொண்டு தமது பிரச்சினைகள் பலவற்றை ஜனாதிபதியி டம் முன்வைத்தனர்.

அவற்றில் பல பிரச்சினைகளுக்கு அந்த இடத்திலேயே தீர்வுகளை வழங்கு வதற்கு நடவடிக்கை எடுத்த ஜனாதிபதி, ஏனைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இங்கு எழுப்பப்பட்ட கேள்வியொன் றுக்கு பதிலளித்த ஜனாதிபதி, பரீட்சை திணைக்களத்தின் சான்றிதழுக்கு வாழ்க்கை தோல்வியடைய அனுமதிக் கப் போவதில்லை என்றும், கட்டியெழுப் பப்படும் இலங்கையில் எதிர்காலத்தில் இளைஞர் யுவதிகளுக்கு பல தொழில் வாய்ப்புகளை உருவாக்க எதிர்பார்ப்பதாக வும் தெரிவித்தார். அதேபோன்று, எதிர்கா லத்தில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர சான்றிதழ் காரணமாக பதின்மூன்று வருட கல்வி நிறுத்தப்படாது எனவும் ஜனா திபதி தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்ப டுத்தும் சீர்திருத்த வேலைத்திட்டம் குறித்து இளைஞர்களுக்கு தெளிவுபடுத்திய ஜனா திபதி, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை சட்டப்பூர்வமாக்கி நாட்டிற்கு நிவாரணம் வழங்குவதுடன், பொருளா தார மறுசீரமைப்பு சட்டமும் இந்த மே மாதம் முன்வைக்கப்படும் என்றும் குறிப் பிட்டார்.

## மற்றுமொரு வேலைத் திட்டம்...

மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார். போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் பாதாள உலகக் குழுவை இல்லாதொழித்தல் வேலைத் திட்டத்திற்கு சமமாக இந்த வேலைத் திட் டமும் நடைமுறைப்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக விசேட பொலிஸ் குழுக்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் நேற்று முன்தினம் ஆறாம் திகதி முதல் எதிர்வரும் பத்தாம் திகதி வரை இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் மேற்படி கையடக் கத் தொலைபேசி மூலம் நிதியை பரி மாற்றம் செய்யும் முறைமையில் சட்ட விரோத போதைப் பொருள் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்ட 198 பேரின் தகவல்கள் ஒரே நாளில் கிடைத்துள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## IMF இன் மூன்றாவது தவணை...

அதிகாரிகளுக்கு இடையே ஊழியர் கள் நிலை ஒப்பந்தம் உள்ளது.

அதைத் தொடர்ந்து, அந்த ஒப்பந் தத்தை முன்வைப்பதற்கான திகதியை சர்வதேச நாணய நிதியம் தீர்மானிக் கும். இதற்குப் பிறகுதான் மூன்றா வது தவணையாக 337 மில்லியன் டொலர்களைப் பெறமுடியும்.

ஆனால் அதற்கு முன் நாம் முடிக்க வேண்டிய பணி ஒன்று உள்ளது. அதாவது கடனை மறுசீரமைப்பதற் கான ஒருமித்த கருத்தை எமது கட னாளிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

எனினும் அனைத்து இருதரப்பு கடன் வழங்குநர்களின் பூர்வாங்க ஒப் புதலைப் பெற்றுள்ளோம். வணிகக் கடன் வழங்குநர்களுடன் ஒப்பந்தங் கள் எட்டப்படுவதற்கான வலுவான எதிர்பார்ப்புகள் உள்ளதாக நேற்று சர் வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள் ளது.

## 13, 14ஆம் திகதிகளில்...

மதுபான விற்பனை நிலையங்களும் மேற்படி தினங்களில் மூடப்படும் என அந்த திணைக்களத்தின் உயரதிகாரி யொருவர் தெரிவித்தார்.

அதே வேளை, வெசாக் வாரத்தை முன்னிட்டு எதிர்வரும் மே மாதம் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நாட்டிலுள்ள அனைத்து மதுபான சாலைகளும் மூடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஹொரணையில் துப்பாக்கிச் சூடு...

கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித் துள்ளது. மேற்படி துப்பாக்கிச் சூட்டு சம்ப வம் ஹொரணை, தல்கஹவில பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதாகவும் காயமடைந்த நபர்கள் இருவரும் வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது. காரில் பயணம் செய்த இருவர் இவ்வாறு துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த மற்றும் ஒரு நபர் ஆஸ்பத்தி ரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள் ளதாகவும் அந்த அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

## சாரதி அனுமதிப் பத்திரங்களை...

அந்த திணைக்களத்தின் ஆணையா ளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க அது தொடர்பில் நேற்று தெரிவிக்கையில்,

மேற்படி சாரதி அனுமதிப் பத்திரம் அச்சிடும் அட்டைகள் இல்லாத காரணத் தாலேயே சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு சுமார் ஐந்து இலட்சம் சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்க முடியாத நிலை காணப்படுவதாக தெரி வித்த அவர், இந்த தாமதம் காரணமாக சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்க மேலும் இரண்டு மாத காலங்கள் எடுக் கும் என்றும் அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

## எரிபொருள் பாவனை...

ஒரு காரணம் என்றும் அந்த சங் கத்தின் தலைவர் ஷெல்டன் பெர் னாண்டோ தெரிவித்துள்ளார். நாட்டில் தற்போது எந்தவித தட்டுப்பாடுமின்றி அனைத்து எரிபொருட்களும் கிடைக் கக்கூடிய நிலையிலும் அதன் பாவனை குறைவடைந்துள்ளதாக ஷெல்டன் பெர் னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

## விசேட ஆணைக் குழு...

ஆணைக் குழுவொன்றை உருவாக்கு வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கான நடவடிக்கைகளை நிதிய மைச்சு மேற்கொண்டு வருவதாகவும் மத்திய வங்கியின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு தீர்மானத்தையடுத்து அரச துறையின் பல்வேறு பிரிவுகளிலும் சம்பள முரண் பாடு தொடர்பான நெருக்கடிகள் உருவா கியதுடன் அதனை நிவர்த்தி செய்யும் வகையிலேயே மேற்படி ஆணைக்குழு நியமிக்கப்படவுள்ளது.

## புதுவருட விடுமுறையில்...

கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி சபையில் பணிபுரியும் அனைத்து அதிகாரிகளுக்கும் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அக்காலப்பகுதியில் அனைத்து பிரதேச செயலாளர்கள் உட்பட மாவட் டத்தின் அனைத்து அரச உத்தியோ கத்தர்களும் அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தேவையான செயற் பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என அந்த அறிவிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## பண்டிகை காலங்களில்...

எச்சரிக்கை விடுத்துள்ளனர். தமிழ், சிங்கள புத்தாண்டுக்காக மக்கள் பல்வேறு பொருட்களை அதிகளவில் கொள்வனவு செய்வதாக தெரிவித்த பொலிஸார், இதன்போது பல்வேறு மோசடியாளர்கள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.

## நேபாளத்தில் பணயக்கைதிகளாக...

இதேவேளை இவர்கள் பாகிஸ்தா னிய பிரஜைகளால் தாக்கப்பட்டு, சித்தி ரவதை செய்யப்பட்டு, அச்சுறுத்தப்பட்ட நான்கு இலங்கையர்களும் அவர்களது வெளிநாட்டு கடவுச்சீட்டுகளும் பறிக்கப் பட்டதாக தெரியவந்துள்ளது. நான்கு இலங்கையர்களையும் இலங்கைக்கு அனுப்புவதற்கு தேவையான ஏற்பா டுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நேபாள பொலிஸார் தெரிவித்தனர்.

# இன்றைய பலன்கள்

(08.04.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம் :**
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு செல்வாக்கு உயரும். செயற்பாட்டில் வெற்றி கிடைக்கும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு லாபம் அதிகரிக்கும்.

**ரிஷபம் :**
தொழில் செய்பவர்களுக்கு ஒப்பந்தங்கள் வந்து சேரும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் கூடும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம் :**
பொன், பொருள் சேர்க்கை உண்டு. பொருளாதாரம் உச்சம் பெறும் .பொது வாழ்வில் உள்ளவர்கள் மிகுந்த கவ னத்தோடு செயல்படுவது நல்லது. மறைமுக எதிர்ப்புக்க ளால் மனம் கலக்கம் ஏற்படும்.

**கடகம் :**
பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாகவோ கல்யாணம் சம் பந்தமாகவோ கடல் தாண்டி சென்று பணி புரிவது சம்பந்த மாகவோ ஏதேனும் முயற்சி செய்திருந்தால் அதில் வெற்றி கிடைக்கும்.

**சிம்மம் :**
பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சியில் வெற்றி உண்டு. பழுதான வாகனத்தை கொடுத்துவிட்டு புதிய வாகனம் வாங்கி பயணிக்கும் எண்ணம் நிறைவே றும்.

**கன்னி :**
பொது வாழ்வில் உள்ளவர்கள் புதிய முயற்சிகளை யோசித்து செய்வது நல்லது. வியாபாரம் தொழில் செய்ப வர்களுக்கு பூமி பிரச்சனையும். இடம் மாற்றமும் உருவாக் கலாம்.

**துலாம் :**
உத்தியோகத்தை பொறுத்த வரை நீங்கள் கேட்டு சலுகை களை உயரதிகாரிகள் கொடுப்பர். நீங்கள் நினைத்த இடத் திற்கு கூட மாறுதல் கிடைக்கலாம்.

**விருச்சிகம் :**
தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து வளர்ச் சிக்கு வழிகாட்டுவர். வெளிநாட்டில் இருந்த வரும் தொலைபேசி அழைப்புகள் ஆதாயம் தருவதாக இருக்கும்.

**தனுசு :**
நண்பர்கள் நல்ல தகவல்களை தருவர். மன தைரியம் அதி கரிக்கும். புதிய பாதை புலப்படும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**மகரம் :**
பொதுவாழ்வில் மற்றும் அரசியலில் உள்ளவர்களுக்கு நல்ல செய்திகள் இல்லம் தேடி வரும். மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும். வியாபாரம் தொழில் செய்பவர்களால் புதிய வர்களை நம்பி செயல்பட இயலாது.

**கும்பம் :**
வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு மாதத்தின் பிற் பகுதியில் எதிர்பார்த்த லாபம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிகள் நீங்கள் கேட்ட சலுகைகளை வழங்குவர்.

**மீனம் :**
வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு அதை விரிவு செய்ய கடன் உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ள வர்களுக்கு வாகனம், வீடு வாங்க அலுவலகத்தில் கேட்டு சலுகைகள் கிடைக்கும்.

## அரச ஊழியர் சம்பளம்...

அத்துடன், ஏப்ரல் மாதத்திற்கான ஓய் வூதியமும் 10ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

## UK யில் சாதனை படைத்த...

உமாசங்கர் அவர்களது மகளாகிய பூஜா உமாசங்கர், சவுத் வேல்ஸ் பல்க லைக்கழகத்தில் விமான பொறியியல் துறையில் பட்டம் பெறவுள்ள நிலையில் அவரின் அந்த துறையிலான அசாத்திய திறமை காரணமாக இன்று பேசுபொரு ளாக மாறியுள்ளர்.

இது பெண்களுக்கு மட்டுமல்ல எமது மண்ணுக்கே பெருமையாகும். விமான துறையில் சாதிக்க விரும்புவர்களுக்கு இவரின் சாதனை ஒரு உந்துசக்தியாக அமையும் என சமூக ஆர்வலர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## லசந்த அழகியவன்ன...

குற்றச்சாட்டுகள் பொய்யானதென் றும் தெரிவித்தார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சொத்துக்கள் மற்றும் ஆவ ணங்கள் தொடர்பில் பொறுப்பு கட் சியின் பொருளாளர் என்ற வகையில் தமக்கே உள்ளதாகவும் அவ்வாறி ருக்கும் போது ஆவணங்களை அழிக்குமளவுக்கு தமக்கு மனநிலை பாதிக்கப்படவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் சொத்துக்களை பராமரிப் பதற்காக நிதியை ஒதுக்குவது உள் ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் தமது அனுமதியின் கீழேயே இடம்பெ றுவதாக தெரிவித்துள்ள அவர், தலை மையகத்தை பாதுகாப்பதுதொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுப் பதாகவும் தெரிவித்துள்ளார்.

## பிரசவ அறைக்குள்...

தெரிவித்துள்ளார். மகப்பேற்று அறைக்குள் கர்ப்பிணிப் பெண்களின் கணவன்மாரை அனுமதிக்கும் முத லாவது அரசாங்க மருத்துவமனை யாக காசல் மருத்துவமனை (Castle Hospital) அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த புதிய நடை முறையினால் கர்ப்பிணிப் பெண்கள் தமது குழந்தைகளை நல்ல மனநிலை யுடன் பிரசவிக்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இப்புதிய திட்டத்தினூடாக பிரசவ வேத னையானது தனது கணவனுடன் பகி ரப்படுவதோடு, தாய் தந்தை குழந்தை உறவு படி நிலை மேலும் உறுதியாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் பிரசவ அறைக் குள் கணவன்மாரை அனுமதிக் கும் நடைமுறை ஏற்கனவே உள்ள நிலையில், அரசாங்க மருத்துவமனை களிலும் முதன் முறையாக அனுமதிக் கும் நடைமுறை அறிமுகம் செய்யப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தலைகீழாக குடைசாய்ந்த...

வில்கமுவ பொலிஸார் தெரிவித்துள்ள னர். தம்புள்ளையில் இருந்து வில்கமுவ நோக்கி பயணித்த இலங்கை கனிய எண்ணெய் கூட்டுத்தாபனத்திற்கு சொந் தமான இந்த எரிபொருள் தாங்கி நேற்று எல்வானா மலை சரிவில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதன்போது எரிபொருள் தாங்கி கவிழ்ந்ததில் பெரும ளவிலான மண்ணெண்ணெய் வீதியில் கொட்டி வீணானதுடன், கொட்டிய மண் ணெண்ணெயை அருகில் இருந்த மக்கள் சேகரித்துக்கொண்டிருந்ததாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. இதேவேளை, சில வாரங்களுக்கு முன்பு இதேபோன்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், பலரும் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ள னர். மிகவும் ஆபத்தான மலைச்சரிவுகள் உள்ள இப்பகுதியில் அபாய அறிவிப்பு பலகைகளை முறையாக பயன்படுத்தி விபத்துகளை தடுக்க சம்பந்தப்பட்ட அதி காரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கூறியுள்ளனர்.

இந்த விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



## நிந்தவூரின் மாவட்ட தொழிற்பயிற்சி நிலைய வள பற்றாக்குறைகளை களைய மு.கா தலைவர் உறுதி

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் நிந்தவூரில் உள்ள மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கடந்த வெள்ளிக்கிழமை (5)முற்பகல் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு அங்குள்ள தேவைப்பாடுகள் குறித்து நேரில் அறிந்து கொண்டார்.

மாவட்ட அலுவகமும் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையமும் அமைந்துள்ள இவ்வளாகத்தில் காணப்படுகின்ற பௌதிக வளப் பற்றாக்குறைகள், மாணவர்களின் தேவைகள் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் கற்கைநெறிகள் நடைபெறும் வகுப்பறைகளுக்கு விஜயம் செய்த அவர், மாணவர்களின் தேவைப்பாடுகள், மேற்கொள்ளப்பட வேண்டிய பௌதிக அபிவிருத்திகள் தொடர்பாகவும் ஆராய்ந்தார்.



இதன்போது தொழிற்பயிற்சி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் ஏ.ஏ. ஜாபிர் உள்ளிட்ட அதிகாரிகளும் உடனிருந்தனர்.

இப் பயிற்சி நிலையத்தின் பௌதிக வளங்களை அபிவிருத்தி செய்யவும், குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும் உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறினார்.

நிந்தவூர் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் மாவட்ட அலுவகம் அமைந்துள்ள இவ்வளாகம் முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத்தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரபின் முயற்சியின் பயனாக நிறுவப்பட்டது.

## காணி அனுமதிப்பத்திரங்கள் கையளிப்பும் இப்தார் நிகழ்வும்

**கிண்ணியா தினகரன் நிருபர்**

காணி அனுமதிப்பத்திரங்கள் பொது மக்களிடம் கையளிப்பும் இப்தார் நிகழ்வும் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச். எம். கனி தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (05) நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஏற்கவே தெரிவு செய்யப்பட்ட காணி உரிமையாளர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநரும் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத் தலைவருமான செந்தில் தொண்டமான், திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத் தலைவரும் கிண்ணியா பிரதேசத்தின் அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல். எம் அதாவுல்லா, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி, கிழக்கு மாகாண காணி அமைச்சின் செயலாளர், கிண்ணியா



மற்றும் குறிஞ்சாக்கேனி பிரிவு சுகாதார வைத்திய அதிகாரிகள், கிண்ணியா வலயக் கல்வி பணிப்பாளர், கிண்ணியா பிரதேசத்துக்கான தேசிய நீர் வளங்கல் வடிகால் அமைப்பு சபையின் நிலைய பொறுப்பதிகாரி, கிண்ணியா பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர், கிண்ணியா பிரதேச செயலக கணக்காளர், கிண்ணியா பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர், கிண்ணியா பிரதேச செயலக காணிப்பிரிவு உத்தியோகத்தர்கள், மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டிருந்தார்கள். இதனை தொடர்ந்து வருகை தந்த அனைவருடனும் இப்தார் நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றது.

## தென்கிழக்கு பல்கலைக்கு விஜயம் செய்த இந்திய உயர் ஸ்தானிகராலய செயலர்



**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் முதல் செயலர் (கல்வி) விவேக் குப்தா தென்கிழக்கு பல்கலைக் கழகத்திற்கு விஜயம் செய்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் தலைமையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது உதவித்தொகை திட்டங்களின் கீழ் இந்தியப் பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியைத் தொடர மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கான வாய்ப்புகள் வழங்குதல் சம்பந்தமாக விரிவாக ஆராயப்பட்டது.

## பிரதி மாகாண ஆணையாளராக வைத்தியர் எம்.ஏ.நபீல் நியமனம்

**(நிந்தவூர் குறூப் நிருபர்)**



கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள பிரதி மாகாண ஆணையாளராக வைத்தியர் எம்.ஏ.நபீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று முன்தினம் (06) திருகோணமலையில் வழங்கினார்.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றினைச் சேர்ந்த இவர், கொழும்பு சுதேச மருத்துவ பீடத்தில் மருத்துவக் கல்வியை நிறைவு செய்து யுனானி வைத்தியராக பட்டம் பெற்றார். களனி பல்கலைக்கழகத்திலும் சுதேச வைத்தியத்துறையில் பட்டம் பெற்ற இவர், வைத்தியராக நியமனம் பெற்று கிழக்கு மாகாண அம்பாறை மாவட்ட வேரான்கட்டுக்கொட, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, நிந்தவூர் போன்ற ஆயுள்வேத வைத்தியசாலைகளில் வைத்திய பொறுப்பதிகாரியாகவும், வைத்திய அத்தியட்சகராகவும் பணி செய்து, கல்முனை பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

## சட்டவிரோத வியாபாரத்தில் ஈடுபட்டோருக்கு அபராதம்

### 233,500 ரூபாய் அபராதமாகச் செலுத்த உத்தரவு

**(ஒலுவில் விசேட நிருபர்)**

அம்பாறை மாவட்டத்தில் கடந்த மார்ச் மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 72 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 02 இலட்சத்து 33 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை, தெஹியத்தக்கண்டி ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 109 வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, இதில் 72 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், இவ்வர்த்தகர்களுக்கு 02 இலட்சத்தி 33 ஆயிரத்தி 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏனைய வர்த்தகர்களுக்கு நீதி மன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சுற்றி வளைப்புகளை மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்.

அத்தியவசியப் பொருட்களுக்கு அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப் படுத்தியமை, காலாவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கெதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாகவும் கூறினார்.

அத்தியவசிய பொருட்களை கூடுதலான விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பாக பொது மக்கள் 1977 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அல்லது மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் 0632222355 எனும் இலக்க தொலைபேசி இலக்கத்திற்கு தகவல்களை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## சம்மாந்துறையில் ரஹ்மத் பவுண்டேசனின் ரமழான் அன்பளிப்பு

**(கல்முனை விசேட நிருபர்)**



புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் அமைப்பானது அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் நோன்பு திறக்கும் இப்தார் ஏற்பாடுகளையும் மனிதாபிமான உதவிகளையும் முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்களான எஸ்.எம்.நிலுபா மற்றும் எஸ்.நளீம் ஆகியோர் மூலம் சம்மாந்துறையின் சில கிராமங்களின் அடையாளப்படுத்தப்பட்ட பயனாளிகளுக்கு சனிக்கிழமை (06) பேரீச்சம்பழப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

பவுண்டேசன் ஸ்தாபகரும் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளருமான ரஹ்மத் மன்சூர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இவற்றை வழங்கினார்.

இந்நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்களுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சம்மாந்துறை மத்திய குழுச் செயலாளரும் திடீர் அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தருமான ஏ.எஸ்.எம். அஸாருதீன் உட்பட நலன் விரும்பிகள், பயானாளிகள், பவுண்டேசன் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.


## பெறுகை அறிவித்தல்

ஊவா மாகாணத்தில் விலங்குற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மூலம் அமுல் நடாத்தப்படும் செயற்றிட்டம் தொடர்பாக விலங்குணவு கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களை தெரிவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களை ஊவா மாகாண விலங்குற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திடமிருந்து 055-2222698 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது apdept.up.gov.lk என்ற இணையதளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**இறுதித் திகதி: 2024.04.26**

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**ஊவா மாகாண கமத்தொழில் திணைக்களம்,**
**ரத்வத்த மாவத்தை, பதுளை.**

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட மூலத்தின் 9(2)ஆம் பிரிவின் பிரகாரம் 2024 ஏப்ரல் 04ஆம் திகதியன்று செயல்வலுப் பெறும்

| | |
|---|---|
| **கம்பனியின் முன்னைய பெயர்:** | தல்கன்யாய டீ பக்டரி (பிரைவட்) லிமிட்டட் |
| **கம்பனி இலக்கம்:** | PV 112993 |
| **கம்பனியின் பதிவு அலுவலகத்தின் முகவரி:** | இல. 59, கிரகோரிஸ் வீதி, கொழும்பு -07 |
| **கம்பனியின் புதிய பெயர்:** | ட்ரான்ஸ் ட்ரேடிங் (பிரைவெட்) லிமிட்டட் |

**சபையின் கட்டளைப்படி**
**பி.ஆர். செக்ரட்டேரியல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்**

## அறிவித்தல்

### இலங்கை பிரிட்ஜ் சம்மேளனம்

**விசேட பொதுச் சபைக் கூட்டம் மற்றும் பதவிநிலை தேர்தல் நடாத்துவது தொடர்பான விடயங்களை கலந்துரையாடல்**

விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டுத்துறை பணிப்பாளர் நாயகத்திற்கு 2023-12-22ஆம் திகதி வெளியிடப்பட்ட 2363/74ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மேற்கூறிய தேசிய விளையாட்டுத்துறை விசேட பொதுக் கூட்டம் மற்றும் பதவிநிலை தேர்தலை நடாத்துவது தொடர்பான விடயங்களை கலந்துரையாடுதல் 2024 ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-07, இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தையில் அமைந்துள்ள இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் 4ஆம் மாடியில் அமைந்துள்ள டன்கன்வைட் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இதன் பொருட்டு இலங்கை பிரிட்ஜ் சம்மேளனத்தின் சட்டவாக்கத்தின் பிரகாரம் இணைவான விளையாட்டு அமைப்புகள் / நிறுவனங்கள் / சங்கங்கள் இருக்குமானால் அந்த இணை விளையாட்டு அமைப்புகள் / நிறுவனங்கள் / சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் அல்லது பிரிட்ஜ் விளையாட்டில் ஈடுபட்டுள்ள விளையாட்டு நிர்வாகிகள் உட்பட விளையாட்டு மேம்பாட்டு நலன்விரும்பிகள் அனைவரும் மேற்குறிப்பிடப்பட்ட தினம் மற்றும் நேரங்களில் தமது விளையாட்டுச் சங்கங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இருக்குமானால் அவைகளுடன் இந்த விசேட பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுவதுடன் இந்தக் கூட்டத்திற்கு உங்களின் வருகை தொடர்பாக 071 0583267 அல்லது 076 3640638 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு மேலும் தயவுடன் அறிவிக்கப்படுகின்றது.

**பேராசிரியர் (ரியல் அட்மிரல்) ஷேமால் பிரனாந்து,**
**விளையாட்டுத்துறை பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம்.**






## கதைகளே விதைகளாக...

# யோசுவாவின் படைப்புக்களில் பாத்திரங்கள் விரிக்கும் புதிய பாகம் – 03

எவ்வளவு பணம் உழைத்தாலும் போதுமானதாக இல்லை என்று நாட்டில் உயர்தட்டில் வாழும் மக்கள் தொடங்கி அடித்தட்டில் வாழும் மக்கள் வரை சொல்கிறார்கள். தமது உழைப்பினால் தமது வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்கும் நிலை குறைந்து வருகிறது என்று கூறுகிறார்கள். இப்படி வாழ்க்கை சுமையை தாங்கி கொள்ள முடியாமல் சலித்துக் கொண்டு வாழ்கிறவர்கள் மத்தியில் சிலர் மகிழ்ச்சியோடும் சிறப்போடும் வாழும் ஒரு சிலரை நாம் சந்திக்கக் கூடும். அவர்கள் அப்படி எப்படி இவ்வளவு சிறப்பாக வாழுகிறார்கள் அவர்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு எங்கிருந்து பணம் இவ்வளவு கிடைக்கிறது என்று சிந்திக்கிறவர்களும் உண்டு.

இந்த வணிகமுறைக்கு உட்படுத்தப்பட்டு நுகர்வுமைய கட்டமைப்புக்குள் சிக்கிகொண்டுள்ள சமூகத்தில் உண்மை, நேர்மை, உழைப்பு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று சில மனிதர்கள் வாழ்ந்தாலும் பலர் இவை எவைக்கும் கட்டுப்பட முடியாமல் வாழ்வதால் சமூகத்தில் அறம்சார்ந்த வாழ்வு முற்றிலும் சிதைக்கப்பட்டு வாழ்வின் சிறப்பு மதிப்பிழந்து வருகின்றது.

யோசுவாவின் மிகச்சிறந்த நாவலான பந்தயத் தேவன் பல மிகச்சிறந்ந பாத்திரங்களை நமக்கு முன் வைக்கின்றது. நேர்மறையான பல பாத்திரங்கள் மத்தியில் ஒரு சில எதிர்மறையான பாத்திரங்களையும் மிக நேர்த்தியாக யோசுவா வடிவமைத்திருக்கிறார்.

ஒரு நாட்டின் மிகப்பெரிய வளம், அதனுடைய மனித வளம். மனிதவளத்தை மிகச்சரியாக கட்டமைக்கக்கூடிய கல்வியும் கலாசார பண்புகளும் அறம்சார்ந்த வாழ்க்கை முறையும் இணைந்து கட்டமைக்கப்பட்ட மனித வளத்தினால் மட்டுமே ஓர் சீர்மியமான பொருளாதார வளத்தை கட்டியெழுப்ப முடியும் என்பதற்கு கிழக்கு ஆசிய நாடுகள் குறிப்பாக ஜப்பான், தென்கொரியா போன்ற மிக குறுகிய காலத்தில் மிக உயர்ந்த பொருளாதார வளத்தை கட்டமைத்துள்ள நாடுகள் சான்றாக இருக்கின்றன. அப்படிப்பட்ட நாடுகளில் தனி மனித ஒழுக்கம் குறித்த விடயங்களில் அநீதியாக பணம் சேர்த்தல் சொத்து சேர்த்தல் ஆடம்பரமாக வாழ்வதற்காய் சுரண்டி பிழைத்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் யோசுவாவின் பந்தயத்தேவன் நாவல் முழுவதுமே தனிமனித வாழ்வியலும் அதனால் சமூகத்தில் ஏற்படும் விளைவுகள் குறித்தும் பேசும் பாத்திரங்களை வடிவமைத்துள்ள யோசுவா தனிமனித நடத்தை கோணங்களால் சமூக தேச அளவில் ஏற்படுகின்ற பொருளாதார சிரழிவுகள் குறித்தும் பேசுகின்றார்.

குறிப்பாக சமூகம் தேசம் சார்ந்த பொதுவான பொருளாதாரம் சார்ந்த சீரழிவுகள் வரும்போது அனைவரும் அரசியல்வாதிகள் கொள்கை வகுப்போர் அதிகாரிகளை நோக்கி கை நீட்டி குற்றம் சுமத்தும் நிலையே இன்று எமது நாட்டில் உண்டு.

ஆனால் பொதுவான சில அழிவுகளுக்கு பொதுமக்கள் தனிப்பட்ட வாழ்வின் ஒழுக்கம் சார்ந்த விடயங்களும் இருக்கின்றது என்பதற்கு ஓர் அடையாளமாகவே பந்தயத்தேவன் நாவல் திகழ்கின்றது.

ஒரு சமூகம் விழிப்போடு இருக்கும் போது சமூகத்தில் குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் எவ்விதமாக நடந்துகொள்வார்கள் என்பதற்கான ஓர் சிறந்த உதாரணமே பந்தலன் என்ற பாத்திர படைப்பு.

'பந்தலன்' போன்றும் அவனது மனைவி 'திருநிதி' போன்றும் இருக்கும் நபர்களை நமது சமூகத்தில் நாம் இனங்காணாது விடுகின்ற போது தான் போதைபொருள் விற்பனை, வழிபறிக் கொள்ளை, பெண்களை கடத்தல், கற்பழித்தல் போன்ற பல விடயங்கள் சர்வ சாதாரணமான விடயங்களாக சமூகத்தில் நடைபெறுகின்றன.

பந்தயத்தேவன் நாவலில் பந்தலனுக்கு யோசுவா கொடுத்த இடம் மிகச் சிறியதே. ஆனால் நாவல் முழுவதற்குமான தாக்கத்தை அந்த பாத்திரம் இங்குமங்கும் இழுத்து செல்கிறது. இந்த நாவலில் வரும் கதைபாங்கு குறித்து தகைசார் வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் கூறுகிற போது,

'தில்லை நகர் ஊராளுமன்றம் எனப்படும் கள்ளுக் கடையில்தான் இந்த பந்தயத் தேவன் கதை ஆரம்பமாகின்றது அதுவும் கதை ஒரு பந்தயம் கட்டுதலோடு ஆரம்பமாகின்றது.

**ஏலும்மென்டா நீ கொண்டுவந்துகாட்டு**
**கொண்டு வந்தா எவ்வளவு தருவியல்...**

எது பந்தயபொருள் என்பது நாவல் முடியும் வரை அவிழ்க்கப்படாத முடிச்சியாக இருப்பதுதான் கதை. ஓர் மர்ம நீட்சியாக வாசகனை இழுத்து செல்வதற்கான பாத்திரங்களை யோசுவா மிக நேர்த்தியாக கட்டமைத்துள்ளார்' என்று பேராசிரியர் சன்முகதாஸ் கூறுகின்றார்.

பந்தயத்தேவன் 'நாவல் யோசுவாவின் மிகச்சிறந்த படைப்பு, இறந்து போன ஒரு மனிதனின் ஆவி ஊருக்குள் நடாத்தும் புரட்சியே இந்த நாவலின் கதை. மிக சுவாரசியமான பல சமகால பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைக்கும் யோசுவா இந்த நாவலில் பண்பாடு என்ற போர்வையில் சமூகத்திற்குள் வேரோடி போயிருக்கும் அடிமைத்தனத்தை முற்றிலும் வேரறுத்து விடும் சந்தர்ப்பங்கள் உணர்ச்சிமிக்கதாக இருக்கின்றது.

இந்நாவலில் வரும் உப பாத்திரங்கள் பலவற்றில் ஒரு சிறிய பாத்திரம் எனக்கு நன்றாக பிடித்திருக்கின்றது. அந்த பாத்திரத்தின் பேர் பந்தலன் அவனது மனைவியின் பேர் திருநிதி. யோசுவா பந்தலனை கதையில் அறிமுகப்படுத்துவதற்கு வசதியாக அவனது மனைவி திருநிதியை அறிமுகப்படுத்துகின்ற அந்த அறிமுகபடுத்தலே மிக அற்புதமாக இருக்கின்றது.'

ஊருக்குள்ள ஒரு செத்த வீடு நடக்கின்றது, நெருங்கிய உறவும் கூட, எனவே திருநிதி செத்த வீட்டுக்கு போக புறப்படுகின்றாள். மிகநீண்ட நாளாக அவள் கண்ட கனவு இன்று நிறைவேற போகின்றது, சரி அவள் அப்படி என்னத்தான் கனவு கண்டாள் ஊரில் நடக்கும் நல்லது கெட்டதுக் கெல்லாம் ஊர் பெண்கள் கூடி கதைத்து செல்லும் போதெல்லாம் திருநிதியின் கண்கள் அவர்களின் கழுத்தை தான் பார்க்கும். ஒவ்வொரு பெண்ணினதும் பெறுமதி அவள் கழுத்தில் தொங்கிய தாலிக்கொடியின் அளவில் இருப்பதாக அவள் நினைத்துக்கொள்வாள். ஒரு காலத்தில் அவள் கழுத்தில் போடுவதற்கு ஓர் சிறிய சங்கிலி கூட இருக்கவில்லை, ஆனால் இப்போது முதல் தடவையாக பத்துபவுனில் ஒரு தாலிக்கொடி அவள் வீட்டில் வந்திருக்கின்றது. அந்த தாலிக்கொடி வீட்டுக்கு வந்தது முதல் ஊரில் நல்லது எதுவும் நடக்கவில்லை இன்று ஓர் கெட்டது அதாவது ஓர் செத்த வீடு நடந்திருக்கின்றது. வழமையாக பெண்கள் செத்த வீட்டுக்கு போகும் போது தாலிக்கொடி அணிவதில்லை ஆனால் திருநிதிக்கு பொறுமை இல்லை என்பதால் அந்த செத்த வீட்டுக்கு தாலிக்கொடியை போட்டுக் கொண்டு சென்று விடுகின்றாள்.

திருநிதியும் அவள் கணவன் பந்தலனும் அந்த செத்த வீட்டுக்குள் நுழைந்ததுமே, எல்லாருடைய கண்களும் திருநிதியின் தாலிக்கொடி மீது விழுகின்றது. என்ன இவள் செத்த வீட்டுக்கு தாலிக்கொடியுடன் வந்திருக்கிறாளே என்பதல்ல, இவள் கழுத்தில் இவ்வளவு பெரிய தாலிக்கொடி எப்படி வந்தது என்பது தான்... அதுவும் கும்பல் கும்பலாய் செத்த வீட்டில் கூடியிருந்து அழும் பெண்கள்

***தாலிக்கொடி தடித்ததேனோ***
***யாரு கொடி அறுந்ததேனோ...***

என்று ஒப்பாரி பாடலுடன் திருநிதி கழுத்தில் வந்த தாலிக்கொடி குறித்து பாடுவதன் மூலம் யோசுவா யார் அந்த பந்தலன் என்பதை அறிமுகப்படுத்துகிறார். பந்தலன் ஒரு சாதாரன கூலித்தொழிலாளி, ஆனால் அண்மைக் காலத்தில் அவன் திடீர் பணக்காரனாக மாறியிருப்பதை அவனை சுற்றி நடக்கும் நிகழ்வுகள் காட்டுகின்றன.

யோசுவா இந்த திடீர் பணக்காரனை அறிமுகப்படுத்தும் விதமே வித்தியாசமானதாக இருக்கின்றது, ஒரு சாதாரன அடிநிலை வருமானத்தில் வாழ்ந்த பந்தலன் குடும்பம் இருந்ததை விட இப்போது இன்னும் அடிநிலைக்கு சென்றதை போல அவனும் அவன் குடும்பமும் நடிக்க தொடங்கியிருந்தது.

பந்தலன் தன் குடும்பத்தில் பட்டினி நிலவுவதாகவும், வீட்டில் பிள்ளைகள் உணவுக்காக அழுவதாகவும் பல பொது இடங்களில் கூறும்போது ஊர் மக்கள் அவன் சொல்வதை கேட்டு பரிதாப படாமல் ஆச்சரியப்படுகிறதை காட்டும் யோசுவா ஒரு திடீர் பணக்காரன் மிக பரம ஏழையாக நடிக்க தொடங்கும் போது அவன் அந்த நடிப்புக்காக தேடும் வார்த்தைகளையும் அவன் இயல்புகளையும் அழகாக விபரிக்கிறார்.

ஆனால் இந்த இரண்டு வருடத்தில் பலகோடி பெறுமதியான சொத்துக்களை சேர்த்திருக்கும் பந்தலன் அவைகளால் பல வகைகளில் ஊருக்குள் முதலீடு செய்திருப்பதை அவனால் மறைக்க முடியாமல் போன விடயங்களும் உண்டு. அப்படிப்பட்ட முதலீடுகள் அரசியல்வாதிகள் அதிகாரிகள் மட்டுமல்ல ஓர் சாதாரன கிராமத் தான் கூட செய்வான் என்பதற்கு பந்தலன் ஓர் எடுத்துகாட்டு.




யோசுவாவின் பந்தயத்தேவன் நாவலில் வரும் பல எதிர்மறை பாத்திரங்களில் பந்தலன் முதலாம் இடத்தை பிடிக்கின்றான். அதற்கான காரணம் சமூகத்தில் உருவாகி வரும் தெருவழிகளார்களும் அவர்கள் உருவாக்கியுள்ள கட்டமைப்புகளும் பல வகையிலும் இலங்கையின் இளைய சமூகத்தை பெரிதும் சீரழித்து வரும் போதை பொருள் கடத்தல் விற்பனையுடன் தொடர்புடையது. இன்றைய இலங்கை சமூகத்தின் மிகப் பெரிய சவாலாக அனைத்து குடும்பங்களும் எதிர்கொள்ளும் சவால்களில் ஒன்றாக இளையோர் போதை பொருள் பாவனை இருந்து வரும் சூழலை பந்தலன் பாத்திரம் ஊடாக யோசுவா முன்வைக்கின்றார்.

சரி பந்தலனுக்கு என்ன நடக்கின்றது என்பதுதான் கதையின் இந்தபகுதியில் சுவாரஷ்சியமாக யோசுவா விபரிக்கிறார். ஒரு செத்த வீட்டிற்கு தாலிக்கொடியுடன்புகுந்தபந்தலனின் மனைவியால் அந்த ஊரே கூடியிருக்கும் இடத்தில் பந்தயனின் முகமுடி கிழிக்கப்படுகிறது. அந்த கிழிக்கப்படும் காட்சிக்காவது நீங்கள் பந்தயத்தேவன் நாவலை வாசித்தே ஆகவேண்டும்.

இந் நாவலை முழுமையாக வாசித்து இது குறித்து யாழ்ப்பாண பல்கலைகழக சமூகவியல் துறை ஆசிரியர் திருவாளர் இராஜேஸ்கண்ணா பின்வருமாறு குறிப்பிடுகிறார். 'பந்தயத்தேவனில்' யோசுவாவின் புனைவுசார் ஈடுபாடு குறிப்பிடத்தக்களவில் கணிப்புப் பெறுவதாயுள்ளது என்பதையே காட்கின்றது அது ஒரு சமூக விமர்சனங்களுக்கு அவரது எழுத்துக்களிலிருந்து அதிக எடுத்துக்காட்டுக்களை பதிவாக்கலாம் சமூகத்தில் நடக்கும் மரணவீடுகள் கௌரவத்தை வெளிப்படுத்தும் சடங்குகளாகவும், பணச் செழிப்பை பறைசாற்றும் நிகழ்வுகளாகவும், போலிப் பெருமைகளை நிலைநாட்டும் அரங்குகளாகவும் மாறிவிட்டமை தொடர்பில் பல விமர்சனங்களை 'பந்தயத்தேவன்' முழுவதும் முன்வைக்கின்றார். இறந்துபோன ஒருவரின் ஆன்மா மரணவீட்டில் வந்திருக்கும் உறவினர்களுக்குள் புகுவதன் வழியாக அவரவர் இயல்புக்கு அமைவாக பேசுவதன் மூலம் அந்த விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஆகமொத்தத்தில் 'பந்தலன்' போன்றவர்கள் இந்த சமூகத்தில் எதனையும் மூடி மறைக்க முடியாது என்பதை கூடியிருந்தவர்கள் புரிந்து கொள்கிறார்கள். பந்தலன் பாத்திரத்தின் மிகப்பெரிய சவால் தான் போதைபொருள் விற்பனையால் சேர்க்கும் பணத்தை எப்படி முதலீடு செய்வது என்பதுதான்.

திடீர் என்று கொட்டத் தொடங்கிய பணத்தினால் தனது நிலம் தங்கம் போன்றவற்றுக்குள் முதலீடு செய்யத் தொடங்கிய பந்தலன் கடைசியில் அவைகளை மறைக்க ஊருக்குள் இருந்த நிலையை விட மோசமான பரம ஏழையாக வாழ்வதை போன்று நடிக்க எடுக்கப்பட்ட ஒவ்வொரு தருணத்திலும் அவனும் அவனது குடும்பமும் மாட்டிக்கொள்வதும் அவமானப்படுவதும் நடந்துகொண்டேயிருக்கின்றது.

ஆனால் இந்த நடிப்புக்காக பந்தலன் எடுக்கும் முயற்சிகளால் சோர்வடையும் போது அவனது கடந்த காலத்தின் ஏழ்மை வாழ்வின் மகிழ்ச்சியை அவன் நினைத்து பார்த்து திருப்தி அடையும் மனநிலை ஏற்படுவதையே அந்த காட்சியின் நிறைவில் பந்தலன் உணர்கின்றான்...

பந்தலன் போன்ற பாத்திரங்கள் இலங்கையில் எல்லா தளங்களிலும் உருவாகியிருக்கிறார்கள் ஆனால் அவர்களை அடையாளம் காண்பதற்கு இந்த பந்தலன் நமக்கு ஓர் சிறந்த உதாரணம்

இக்பால் அலி...

# மதுரங்குளி ஜாமியத்துல் அஸீஸிய்யாவில் புதிய விடுதிக்கான அடிக்கல் நாட்டு விழா





பெற்றோரை இழந்த எமது பிள்ளைச் செல்வங்களுக்கு சிறந்த மார்க்க அறிவுடனான கல்வியைப் பெற்றுக் கொடுக்க உதவுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தர்மமாகும்.

சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்காக கை கொடுப்பது நிலைபேறான தர்மமாகும் என தர்ஹா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் தெரிவித்தார்.

மதுரங்குளி விருதோடை அல்ஜாமியத்துல் அஸீஸிய்யா கலாபீடத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய மாணவர் மற்றும் விருந்தினர் விடுதிக்கான அடிக்கல் நடும் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கலாபீட ஸ்தாபகர் சங்கைக்குரிய ஷெய்கு அஸ்ஸெய்யித் அப்துல் அஸீஸ் மௌலானா குஷ்ஹாலி அர்ரிபாயீ தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஸ்ரீலங்கா சரீஆ கவுன்ஸில் தலைவரும் மூத்த உலமாவுமான மௌலவி ஹஸ்புல்லாஹ் அப்துல் காதர் (பஹ்ஜி) துஆப் பிரார்த்தனை நடத்தினார்.

அஸீஸிய்யா அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி எம்.அப்துல் வாஹித் (பஹ்ஜி) உட்பட கலாபீட விரிவுரையாளர்கள், அல் பாஸ் சர்வதேச பாடசாலை அதிபர் உட்பட ஆசிரியர்கள் மாணவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கலாநிதி நஜீப் ஹாஜியார் மூத்த உலமாவான மௌலவி ஹஸ்புல்லாஹ் அப்துல் காதரை பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது; பெற்றோரை இழந்த பிள்ளைகளை நாம் எல்லா துறைகளிலும் கை தூக்கி சமூகத்திற்கும் ஊருக்கும் நாட்டிற்கும் உகந்த நற்பிரஜைகளாக மாற்ற வேண்டும்.

இன்றைய சிறுவர்களே நாட்டின் நாளைய தலைவர்கள். அவர்களுக்கு சீரான கல்வியைப் பெற்றுக் கொடுத்து உலமாக்களாகவும், வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும், சட்ட த்துறை நிபுணர்களாகவும் உருவாக்க வேண்டும்.

பெற்றோர்களை இழந்த பிள்ளைகளை பராமரிப்பது சிறந்த பணியாகும். விருதோடை அஸீஸிய்யா கலாபீடம் இப் பணியை செவ்வனே முன்னெடுத்துள்ளது. மார்க்கக் கல்வியையும், உலகக் கல்வியையும், தொழில் கல்வியையும் எமது பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# குலோபல் அகடமி ஏற்பாட்டில் கொழும்பில் இப்தார் நிகழ்வு





**கொழும்பு தினகரன் நிருபர்**

பத்தரமுல்ல மற்றும் நுகேகொட ஆகிய இடங்களில் இயங்கி வரும் 'குலோபல் அகடமி' கல்வி நிறுவனம் அதன் இப்தார் நிகழ்வு மற்றும் அதிதிகள் கௌரவிப்பு நிகழ்வினை கொழும்பு 3இல் அமைந்துள்ள ரமடா ஹோட்டலில் கடந்த வியாழக்கிழமை (04) ஏற்பாடு செய்திருந்தது.

கல்வி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் இர்ஸாட் ஏ றஸாக் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான கனடாவின் உயர் ஸ்தானிகர் டேனியல் பூட் கலந்து கொண்டு சிறப்பித்தார். விசேட அதிதிகளாக இலங்கை மற்றும் கனடா நாட்டிற்கான வர்த்தக தூதுக் குழுவின் தலைவர் பிரியந்த பத்மசிறி சந்திரசேகர, ஆன்மிக ஆலோசகரும் பாரம்பரிய ஆயர்வேத வைத்தியருமான தர்மசிறி தேரர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், விசேட இப்தார் பயானை மௌலவி ஸக்கீல் ஆங்கிலத்தில் வழங்கினார். இந்நிகழ்வில் கல்வி நிறுவனத்துடன் தொடர்புடைய அதிகமான சகோதர இன மக்கள் கலந்து கொண்டிருந்ததோடு கல்வி நிறுவனத்தின் சிங்கள மற்றும் முஸ்லிம் ஊழியர்களால் கஸீதாக்களும் பாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# புதையல் தோண்டிய மூவர் சந்தேகத்தில் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

புதையல்தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவரை எஹட்டுவெவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய கடந்த 04 ஆம் திகதி இரவு எஹட்டுவெவ பொலிஸ் பிரிவின் மீகலாவ பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது புதையல் தோண்டிக்கொண்டிருந்த சந்தேக நபர்கள் மூவரை கைது செய்துள்ளதுடன் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் சிலவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 23,45,52 வயதுடைய கல்கமுவ, மிஹிந்தலை மற்றும் மீகலாவ பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எஹட்டுவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வருட இறுதிக்குள் கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவடையும்

## வட மாகாண ஆளுநர்





கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை தொடர்பான விழிப்புணர்வுக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (06) விசேட நிகழ்வும் கிரிக்கெட் போட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன், வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸும் கலந்துகொண்டார்.

இதன்போது உரையாற்றிய வட மாகாண ஆளுநர், கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோது 2030ஆம் ஆண்டுக்குப் பின்னரே இலங்கையை கண்ணிவெடி அற்ற நாடாக பிரகடனப்படுத்த முடியும் என்ற ஒரு நிலைப்பாடு எழுந்ததாகவும், எனினும் இந்த வருட இறுதிக்குள் பெரும்பாலான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் தங்களுடைய குடியிருப்புகளுக்குள் செல்லக்கூடிய நிலை ஏற்படும் என எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபடும் சர்வதேச அமைப்புகளுக்கும், இலங்கை இராணுவத்தினருக்கும் இதன்போது நன்றி தெரிவித்த ஆளுநர், மீள்குடியேற்றம் உள்ளிட்ட பல நடவடிக்கைகளுக்கு கண்ணிவெடி அகற்றப்படாமை பாரிய சவாலாக காணப்படுவதாகவும் கூறினார்.

அத்தோடு, பூநகரி மற்றும் முகமாலை பகுதிகளில் அதிகளவு கண்ணிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இந்த செயற்பாடுகளில் பணியாற்றிக்கொண்டிருப்போர், தங்களின் உயிர்களை பணயம் வைத்து ஆற்றிவரும் சேவைக்காகவும் ஆளுநர் நன்றி தெரிவித்ததோடு, மீள்குடியேற்ற செயற்பாடுகளை நிறைவு செய்ய கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களின் ஒத்துழைப்பு மிக அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நிலக்கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளில் பெண்களை ஈடுபடுத்திய நாடு என்ற பெருமையை இலங்கை கொண்டுள்ளது.

அந்த வகையில், இலங்கையில் பெண்கள் முதன் முதலாக கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை வவுனியாவில் ஆரம்பித்தமையை நினைவுபடுத்திய ஆளுநர், கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு விசேடமாக நன்றிகளையும் பாராட்டுகளையும் கூறினார்.

# வடக்கின் உதயம்

## யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 'ஓ' பொசிட்டிவ் குருதிக்கு தொடந்தும் பற்றாக்குறை

### இரத்ததான முகாம்களை ஒழுங்கு செய்யுமாறு கோரிக்கை



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் 'ஓ' பொசிட்டிவ் குருதிக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக, வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவில் இருந்து தினமும் 'ஓ' பொசிட்டிவ் வகை குருதி அதிகளவான நோயாளர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இதனால், குறித்த வகை குருதிக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த ஆபத்தான நிலையினைக் கருத்திற்கொண்டு பொதுமக்கள் குருதிக்கொடை வழங்குவதற்கு முன்வருமாறு இரத்த வங்கிப் பிரிவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

அத்துடன், கிராமங்கள், அலுவலகங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகள் மூலம் குருதிக்கொடை முகாம்களை ஒழுங்கு செய்து, உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி பிரிவினர் கேட்டுள்ளனர்.

## அராலியில் மாபெரும் சைக்கிளோட்டப்போட்டி!



**பு.கஜிந்தன்**

அராலி சிறீமுருகன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டியானது நேற்று நடைபெற்றது.

சிறீமுருகன் சனசமூக நிலையத்தின் 84ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட இந்தப் போட்டியானது சிறீமுருகன் சனசமூக நிலையத்துக்கு அருகாமையில் ஆரம்பமானது.

ஐந்து சுற்றுக்களாக இடம்பெற்ற இந்த சைக்கிளோட்டப் போட்டி ஆலடிச் சந்தி, அராலி ஆவரம்பிட்டி முத்துமாரியம்மன் ஆலய வீதி, அராலிப் பாலம், வட்டுக்கோட்டை சந்தி ஊடாக மீண்டும் சிறீமுருகன் சனசமூக நிலையத்தை வந்தடைந்தது.

இந்த போட்டியில் யாழ்ப்பாணம் மட்டுமல்லாது வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தந்த வீரர்களும் பங்குபற்றியிருந்தனர்.

இதில் சிறீமுருகன் சனசமூக நிலையத்தினர், சைக்கிள் ஓட்ட வீரர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## குளங்கள் கிராமங்கள் மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ்

# வவுனியாவில் 29 விவசாயிகளுக்கு தானிய விதைகள்

**வவுனியா விசேட நிருபர்**



கிராமிய மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக குளங்கள், கிராமங்கள் மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் வவுனியாவில் 29 விசாயிகளுக்கு தானிய விதைகள் வழங்கப்பட்டன.

நீர்பாசன அமைச்சின் கீழ் உள்ள குளங்கள், கிராமங்களின் மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கிராமிய மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக பயிர்ச்செய்கைக்கான தானிய விதைகள் வழங்கும் வேலைத்திட்டம் நாடு பூராகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதடிப்படையில், வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு தானிய விதைகள் வழங்கும் நிகழ்வு வவுனியா இலுப்பையடி பகுதியில் அமைந்துள்ள கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தில் நேற்று நடைபெற்றது.

இத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட குளங்களின் கீழான பயிர்ச்செய்கைக்காக கச்சான், கௌப்பி, பயறு, உழுந்து என்பன வழங்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு கட்டமாக கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தின் கீழ் உள்ள 25 விவசாயிகளுக்கு விதை கச்சானும், 2 விவசாயிகளுக்கு கௌப்பி விதைகளும், ஒரு விவசாயிக்கு உளுந்து விதைகளும், மற்றும் ஒரு விவசாயிக்கு பயற்றம் விதைகளும் என 29 விவசாயிகளுக்கு விதைகள் வழங்கப்பட்டதுடன், பயிர்ச் செய்கை தொடர்பான ஆலோசனை வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

# 'ரண் அஸ்வனு' 2022 விருது வழங்கும் நிகழ்வு

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**



(அஉ) 2024 மார்ச் மாதம் 30ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை சுதந்திரக் கட்சியின் விசேடக் கூட்டமொன்றென அழைக்கப்படும் கூட்டத்தின்போது இலங்கை சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து முறைப்பாட்டாளரை விலக்கும் உத்தேச தீர்மானத்தின் பிரகாரம் முறைப்பாட்டாளர் அந்தப் பதவியின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இடையூறு செய்வதற்கு மற்றும்/அல்லது தடுப்பதற்கு 1ஆம் மற்றும்/அல்லது 2ஆம் மற்றும்/அல்லது 3ஆம் மற்றும்/அல்லது 4ஆம் மற்றும்/அல்லது 5ஆம் பிரதிவாதி மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சி மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகள் மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகள் மற்றும்/அல்லது அவர்களின் முகவர்கள் மற்றும்/அல்லது பிரதிநிதிகள் மற்றும்/அல்லது ஊழியர்கள் மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் இடைக்கால இன்ஜன்க்ஷன் தடையுத்தரவிற்காக முறைப்பாட்டரின் வேண்டுகோளை விசாரித்து தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளும் வரை தடுக்கும் தடையுத்தரவை வழங்குமாறும்,

(அஊ) 2024 மார்ச் மாதம் 30ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை சுதந்திரக் கட்சியின் விசேடக் கூட்டமொன்றென அழைக்கப்படும் கூட்டத்தின்போது இலங்கை சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து முறைப்பாட்டாளரை விலக்கும் உத்தேச தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றும்.்.அல்லது இலங்கை சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராக பரிந்துரைப்பதற்கு 5வது பிரதிவாதியை இடைக்கால இன்ஜன்க்ஷன் தடையுத்தரவிற்காக முறைப்பாட்டாளரின் வேண்டுகோளை விசாரித்து தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளும் வரை தடுக்கும் தடையுத்தரவை வழங்குமாறும்,

(அஎ) 2024 மார்ச் மாதம் 30ஆம் திகதி நடாத்தப்பட்ட இலங்கை சுதந்திரக் கட்சியின் விசேடக் கூட்டமொன்றென அழைக்கப்படும் கூட்டத்தின்போது 5ஆம் பிரதிவாதியை இலங்கை சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமிக்கும் உத்தேச தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராக 5வது பிரதிவாதியை ஏற்றுக்கொள்ளும் மற்றும்/அல்லது 5ஆம் பிரதிவாதியை இலங்கை சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராக பரிந்துரைத்த 1ஆம் மற்றும்/ அல்லது 2ஆம் மற்றும்/அல்லது 3ஆம் மற்றும்/அல்லது 4ஆம் மற்றும்/அல்லது 5ஆம் பிரதிவாதி மற்றும்/அல்லது இலங்கை சுதந்திரக் கட்சி மற்றும்/அல்லது அதன் பிரதான அமைப்புகள் மற்றும்/அல்லது அதனோடு இணைந்த அமைப்புகள் மற்றும்/ அல்லது அவர்களின் முகவர்கள் மற்றும்/அல்லது பிரதிநிதிகள் மற்றும்/அல்லது ஊழியர்கள் மற்றும்/அல்லது அவர்களின் கீழ் கடமையாற்றும் அனைவரையும் இன்ஜன்க்ஷன் தடையுத்தரவிற்காக முறைப்பாட்டாளரின் வேண்டுகோளை விசாரித்து தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளும் வரை தடுக்கும் தடையுத்தரவை வழங்குமாறும்,

(அஏ) வழக்கு கட்டணங்களை வழங்குமாறும்

மேற்கூறப்பட்ட பெயரையுடைய முறைப்பாட்டாளரால் மேற்கூறப்பட்ட இலக்கத்தைக் கொண்ட வழக்கானது இலங்கை சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக மற்றும் மேற்கூறிய கட்சி உடையும் என்பதால் இது தொடர்பில் ஆர்வமுள்ள சகலரும் அறிந்துகொள்ளும் பொருட்டு மேற்கூறிய வழக்கு தொடர்பாக இலங்கை சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு இந்த வழக்கு தொடர்பான பகிரங்க அறிவித்தலொன்றை பிரசுரிப்பதற்கு கௌரவ நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

அந்தக் கட்டளையின் பிரகாரம் இலங்கை சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக அந்தக் கட்சியின் சார்பில் மற்றும் அதன் அங்கத்தவர்கள் அறிந்துகொள்வதற்காக இந்த அறிவித்தல் இவ்வாறு பிரசுரிக்கப்படுகின்றது. அடுத்த வழக்கு நாள் 2024ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 08ஆம் திகதியாகும் என மேலும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2024ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 04ஆம் திகதி.

**நீதிமன்றத்தின் கட்டளையின் பிரகாரம்,**

**பதிவாளர் / பிரதி பிஸ்கால்,**
**கொழும்பு மாவட்ட நீதிமன்றம்,**
**கொழும்பு-12.**

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
## போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA)

### 1,500 கி.மீ. கிராமிய வீதிகள் செயற்றிட்டத்திற்காக விலைமனுக்கள் கோருதல்

(IFB இல. 1500 km/CE/MNG)/2024/01)

மொனராகலை பிரதான பொறியியலாளர் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் 30ஆம் தர முன்கலவை கொங்கிறீட்டை (Ready mix - Grade 30) பெற்றுக்கொள்வதற்காக மேற்கூறிய IFB இலக்கத்தின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் 2024-04-09ஆம் திகதி முதல் 2024-04-30ஆம் திகதி வரையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் www.rda.gov.lk எனும் இணைய தளத்திற்குப் பிரவேசித்து அல்லது 055-2276597 / 057-2222170 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான பொறியியலாளர் (மொனராகலை)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

## INVITATION FOR BIDS (IFB)

### DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE
### CHAVAKACHCHERI URBAN COUNCIL
### LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a **grant** from the **European Union** towards the cost of **Local Development Support Project,** and intends to apply part of the proceeds of this **grant** to payments under the Contract for Work as described below.
2. The **Chairman, Provincial Project Procurement Committee (PPPC)** on behalf of the **Chavakachcheri Urban Council** now invites sealed bids from eligible and qualified bidders for the work as described below.

| No. | Contract No. | Contract Name | Employer's Estimated Cost (Rs. Mn) | CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Security Amount (Rs) | Bid Validity Period | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/ JAF/CUC/PT 1/2023/01 | Construction of 02 Shops at the Bus Stand, Chavakachcheri Town | 29.86 | C5 or above Building Construction | 105 | 450,000.00 | 25-Aug-2024 | 25-Sep-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty and grade as stated above with the Construction Industry Development Authority (CIDA).
5. Qualification requirements to qualify for contract award are included in Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from **Secretary, Chavakachcheri Urban Council, A9 Road, Chavakachcheri, Jaffna (T.P No: 0212270806, Fax No: 0212270079)** and inspect the bidding documents at **Chavakachcheri Urban Council, A9 Road, Chavakachcheri, Jaffna** from **8-Apr-2024** until **28-Apr-2024** between **09:00 Hrs** and **15:00 Hrs** on normal working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Chavakachcheri Urban Council, A9 Road, Chavakachcheri, Jaffna** from **8-Apr-2024** until **28-Apr-2024** between **09:00 Hrs** and **15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Rs.8,500.00.**The method of payment will be **by cash.**
8. Bids shall be delivered in duplicate to **Chairman, Provincial Project Procurement Committee (PPPC), Local Development Support Project (LDSP), Department of Local Government (NP), Elders' Home Complex, Kaithady** at or before **14:00 Hrs** on **29-Apr-2024.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a **Bid Security** as stated in the Table above.

**Chairman,**
**Provincial Project Procurement Committee (PPPC),**
**Local Development Support Project (LDSP),**
**Department of Local Government (NP),**
**Elders' Home Complex,**
**Kaithady.**

**8-Apr-2024**

## INVITATION FOR BIDS (IFB)

### DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE
### POONAKARY PRADESHIYA SABHA
### LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a **loan** from the **World Bank** towards the cost of **Local Development Support Project,** and intends to apply part of the proceeds of this **loan** to payments under the Contract for Work as described below.
2. The **Chairman, Provincial Project Procurement Committee (PPPC)** on behalf of the **Poonakary Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the work as described below.

| No. | Contract No. | Contract Name | Employer's Estimated Cost (Rs. Mn) | CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Security Amount (Rs) | Bid Validity Period | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/KN/ POPS/2024/ BT4/01 | Construction of Shopping Units at Vadiyadi Junction, Poonakary | 23.81 | C6 or above Building Construction | 119 | 360,000.00 | 14-Jul-2024 | 14-Aug-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty and grade as stated above with the Construction Industry Development Authority (CIDA).
5. Qualification requirements to qualify for contract award are included in Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from **Secretary, Poonakary Pradeshiya Sabha, Vadiyadi Junction, Poonakary, (T.P. No. 021-2284572, Fax No. 021-2284572)** and inspect the bidding documents at **Poonakary Pradeshiya Sabha, Vadiyadi Junction, Poonakary,** from **8-Apr-2024** until **28-Apr-2024** between **09:00 Hrs** and **15:00 Hrs** on normal working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Poonakary Pradeshiya Sabha, Vadiyadi Junction, Poonakary,** from **8-Apr-2024** until **28-Apr-2024** between **09:00 Hrs** and **15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Rs.7,500.00.**The method of payment will be **by cash.**
8. Bids shall be delivered in duplicate to **Chairman, Provincial Project Procurement Committee (PPPC), Local Development Support Project (LDSP), Department of Local Government (NP), Elders' Home Complex, Kaithady** at or before **14:00 Hrs** on **29-Apr-2024.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a **Bid Security** as stated in the Table above.

**Chairman,**
**Provincial Project Procurement Committee (PPPC),**
**Local Development Support Project (LDSP),**
**Department of Local Government (NP),**
**Elders' Home Complex,**
**Kaithady.**
**8-Apr-2024**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Lake House Branch Acc. No. 000000377

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்கோரல்

**களுத்துறை நிறைவேற்று பொறியியல் பிரிவின் கீழ் இயங்கும் கி.மீ. 1500 வீதி செயற்திட்டம் தொடர்பான வீதிகளை புனரமைத்தல்**

| மனு இலக்கம் | விபரம் |
|---|---|
| RDA/SP/1500km/WP/78 | மாவல ஜயசங்க மாவத்தையை புனரமைத்தல் |

மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களுக்காக **தேசிய மனுக்கோரல் போட்டி முறையின்** கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான களுத்துறை நிறைவேற்று பொறியியல் பிரிவின் கீழ் இயங்கும் கி.மீ. 1500 வீதி செயற்திட்டம் தொடர்பான வீதிகளை புனரமைப்பதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. **2024.04.08** ஆம் திகதி முதல் **2024.04.22** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை
நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

### பொதுமக்களுக்கான அறிவித்தல்

**பாதுகாப்பாக தக்கவைக்கப்பட்டுள்ள இறப்பு நன்மை பணம் பற்றிய விழிப்புணர்வு ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச்சபை 1981 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கச் சட்டம்**

1995 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையில் இறந்த உறுப்பினர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்ட பங்களிப்புகளின் இருப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய வட்டி பணமானது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பயனாளிகளுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இறந்த உறுப்பினர்களின் பணத்தைப் பெற முன்வராத உரிமையாளர்களின் நிலுவைத்தொகையானது எமது நிதியச் சபையின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதால், அத்தகைய பயனாளிகள் இருப்பின் அவர்கள் தங்களது அடையாளத்தை **2024.08.15 ஆம் திகதிக்கு** முன் உறுதிப்படுத்தி, பணத்தினை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை உடனடியாக வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

- இறந்த உறுப்பினரின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் இறப்புச் சான்றிதழின் அசல்.
- விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்
- இறந்த உறுப்பினர் மற்றும் விண்ணப்பதாரரின் அடையாள அட்டைகளின் நகல் (கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளரினால் சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும்).

இறப்புப் நன்மைகளைப் பெறாத ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் சபையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது மேலும் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களினூடாக **நன்மைகள் நிர்வாகப் பிரிவைத்** தொடர்பு கொள்ளவும்.

**நன்மைகள் நிர்வாகப் பிரிவு**

தொலைபேசி இலக்கம் - 0117 747 233 மற்றும் 0117 747 234
மின்னஞ்சல் - mgrbenad@etfb.lk

தலைவர் / தலைமை நிர்வாக அதிகாரி

**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை**
19-23 ஆம் மாடி, "மெஹெவர பியெச",
த.பெ.இல. 807, கிருள வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05.
தொலைபேசி - 0117747200
இணையத்தளம் - www.etfb.lk

SELACINE

### 2024 அரச நாட்டிய விழா, அரச சித்திரம் மற்றும் சிற்பக்கலை விழா, தேசிய சிறுவர் நாடக விழா மற்றும் அரச நாடக விழாவிற்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன

புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைச்சபையின் அரச நாட்டிய மற்றும் மேடை நாடக ஆலோசனை சபை, அரச கட்புல கலை ஆலோசனை சபை மற்றும் அரச நாடக ஆலோசனை சபையினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற கீழ்க்காணும் விருது விழாவிற்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

**1. அரச நாட்டிய விழா – 2024**

கலையகம், கலாசார நிலையம், பாடசாலை, உயர் கல்வி நிறுவனம், பல்கலைக்கழகம் போன்ற எந்த நிறுவனத்திலும் கல்வி கற்கும் நடனக் கலைஞர்கள் (ஆண்/பெண்) விண்ண்பிக்கலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் 2024 ஏப்ரல் 30 பி.ப.4.00 இற்கு முடிவடையும் மேலதிக விபரங்களை 011-2875796 தொ.பே இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்லாம்.

**2. அரச சித்திரம் மற்றும் சிற்பக்கலை விழா – 2024**

சித்திரம் மற்றும் சிற்பக்கலை சம்பந்தமாக ஆர்வம் காட்டுகின்ற கலைஞர்கள், கலையகம், கலாசார நிலையம், தொண்டர் அமைப்புகள், வேறு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் 2024 ஜீலை 25 பி.ப.4.00 இற்கு முடிவடையும் மேலதிக விபரங்களை 011-2882551 தொ.பே இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்லாம்.

**3. தேசிய சிறுவர் நாடக விழா – 2024**

தேசிய சிறுவர் நாடக விழா - 2024 இற்காக சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த பிரிவின் கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மட்டுப்படுத்தப்பட்ட பிரிவிற்காக பாடசாலை மட்டத்தின் விண்ணப்பிக்க முடிவதுடன், திறந்த பிரிவிலிருந்து எந்த நபரும் அல்லது நிறுவனத்திற்கும் கலந்துகொள்ளலாம். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் நாடகப்பிரதி மூன்று பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் 2024 ஏப்ரல் 30 பி.ப.4.00 இற்கு முடிவடையும் மேலதிக விபரங்களை 011-2872385 தொ.பே இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்லாம்.

**4. அரச நாடக விழா – 2024**

அரச நாடக விழாவில் குறுகிய மற்றும் நீண்ட நாடக விழாவின் விண்ணப்பங்கள் ஏற்றல் 2024.04.30 பி.ப.4.30 வரை நாட்கள் நீடிக்கப்பட்டுள்ளன.

மேற்படி விழா பற்றிய மேலதிக விபரங்கள் சகலதும் மாவட்ட செயலகம்/பிரதேச செயலகங்களின் கலாசார அதிகாரியிடம் அல்லது கலாசார விவகாரத் திணைக்களத்தின் தலைமயகத்திற்கு வருகைதந்து அல்லது www.culturaldept.gov.lk இணையதளத்திற்கு பிரவேசித்து அல்லது Department of cultural Affairs என்ற Facebook பக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர்**
**கலாசார விவகாரத் திணைக்களம்.**

Daily News Classifieds, the Housewives' companion

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

### வ/ப இலங்கை உர நிறுவனம்

**2024/25ஆம் வருடங்களில் வரையறுக்கப்பட்ட இலங்கை உர நிறுவனத்தின் துப்புரவேற்பாட்டு சேவைகளை நடாத்திச் செல்வதற்கான கேள்வி**

**கேள்வி இல. 2024/25/CFC/HPT/JS/01**

வ/ப இலங்கை உர நிறுவனத்திற்கு துப்புரவேற்பாட்டுச் சேவைகளை 2024-05-15ஆம் திகதி முதல் 2025-05-14ஆம் திகதி வரையில் நடாத்திக் கொண்டு செல்வதற்கான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை 2024-04-29ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. இக்கேள்விக்குரிய மாதிரிப் படிவங்கள் மற்றும் நிபந்தனைகளை மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா (இரண்டாயிரம் ரூபா) தொகையை வத்தளை, ஹுணுப்பிட்டி, சுவர்ண ஜயந்தி மாவத்தையில் அமைந்துள்ள வ/ப இலங்கை உர நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தின் காசாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் 2024-04-08ஆம் திகதி முதல் 2024-04-26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

03. பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்களை ''கேள்வி இல. 2024/25/CFC/HPT/JS/01'' எனக் கடித உறையில் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2024-04-29ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் அனுப்புதல் வேண்டும் அல்லது வத்தளை, ஹுணுப்பிட்டி, சுவர்ண ஜயந்தி மாவத்தையில் அமைந்துள்ள வ/ப இலங்கை உர நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்பட்டு கேள்விதாரர்களுக்கு மீண்டும் ஒப்படைக்கப்படும்.

04. கேள்விகள் 2024-04-29ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முடிவுறும் என்பதுடன் அதன் பின் கேள்விகள் உடன் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

05. கேள்வி நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், மீளளிக்கப்படும் 50,000.00 ரூபாவுக்கான (ஐம்பதாயிரம் ரூபா மட்டும்) கேள்விப் பிணை முறியை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். இதற்காக வங்கிப் பிணை முறி அல்லது இயைபுடைய தொகையை வ/ப இலங்கை உர நிறுவனத்தின் காசாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கேள்வியுடன் இணைத்தல் வேண்டும்.

06. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை வ/ப இலங்கை உர நிறுவனத்தின் பதில் முகாமையாளரிடம் (பெறுகைகள் மற்றும் இறக்குமதி) பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 011-2947765/077-2069981 தொலைநகல்: 011-2930423)

07. சகல கேள்விதாரர்களும் வேலை இடப்பரப்பை பரீட்சித்துப் பார்த்து கேள்விகளைச் சமர்ப்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது என்பதுடன் வ/ப இலங்கை உர நிறுவனத்தின் பதில் முகாமையாளரின் (நிர்வாகம் மற்றும் மனிதவளங்கள் - தொலைபேசி 0772931244) கண்காணிப்பின் கீழ் 2024-04-08ஆம் திகதி முதல் 2024-04-26ஆம் திகதி வரையான வார நாட்களில் கடமை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் வேலை இடப்பரப்பை பரீட்சித்துப் பார்க்கலாம்.

08. கேள்வி முன்னோடிக் கூட்டம் 2024-04-22ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு வ/ப இலங்கை உர நிறுவனத்தின் பெறுகைப் பிரிவில் இடம்பெறும். இதில் கலந்துகொள்ளுமாறு அனைத்து விலைமனுதாரர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வ/ப இலங்கை உர நிறுவனம்,**
**பெறுகைப் பிரிவு,**
**லக்பொஹொர சுவர்ணஜயந்தி மாவத்தை,**
**ஹுணுப்பிட்டிய, வத்தளை.**
**2024-04-08ஆம் திகதி.**

# பெறுகை அறிவித்தல்

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம் - கொலொன்னாவ

**Supply of Hydraulic Hoists with all necessary accessories for radial gates 02Nos of Kuda Oya Reservoir**

பெறுகை இல. **3/1/1/2185/24Q/2M/5**

01. அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக் குழு தவிசாளரால் குடாஓய நீர்த்தேக்கத்தின் 02 ரேடியல் கேட்களுக்குத் தேவையான சகல துணைப்பாகங்கள் சகிதம் ஹைட்ரோலிக் உயர்த்தியொன்றை வழங்குவதற்காக தகைமை வாய்ந்த மற்றும் கீர்த்தி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. வழங்கல் செய்வதற்கான காலம் கட்டளை வழங்கப்பட்டதன் பின் 16 வாரங்களாகும்.
02. நாடளாவிய ரீதியில் விலைமனுக்கள் கோரப்படும். ஐந்து உருப்படிகளும் தனித்தனி பொதிகளாக கவனத்திற் கொள்ளப்படும் என்பதுடன் இதன்போது அரை விலைமனுக்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.
03. இதில் ஆர்வம் கொண்ட கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் (பொறியியல் வேலை வழங்கல்) / வழங்கல் இயந்திரப் பொறியியலாளர் (தொலைபேசி: (011)2534579/(011)2572351/2 நீடிப்பு 150) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். அல்லாவிடில் அரச வேலை நாட்களில் 2024-04-08ஆம் திகதி முதல் 2024-05-06ஆம் திகதி வரை அரசாங்கத் தொழிற்சாலைக்கு சமுகம் தந்து விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. வழங்கப்படும் உருப்படிக்கு உற்பத்தியாளர்களின் அனுமதி தகைமைத் தேவைப்பாடாக கவனத்திற் கொள்ளப்படும்.
05. தகைமையுடைய உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு விருப்ப வெளிப்பாடு ஏற்புடையதல்ல. மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளன.
06. பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் மற்றும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா பணத்தை ரொக்கப் பணத்தை காசாளருக்குச் செலுத்தி ஆங்கில மொழியில் அச்சடிக்கப்பட்ட விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
07. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு நகல்களிலான விலைமனுக்களை 2024-05-07ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனடுத்து விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் இறுதி நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்னரே முன்னிலையாகுமாறு மேலும் அறிவுறுத்தல் செய்யப்படுகின்றது.
08. சகல விலைமனுக்களுடனும் 800,000.00 ரூபா பெறுமதியான இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறி அல்லது ''பணிப்பாளர் நாயகம், அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்,'' சார்பாக வங்கி வரைவொன்றைப் பெற்றுக்கொள்ளல் அல்லது அந்தப் பெறுமதியை அரசாங்கத் தொழிற்சாலையின் காசாளருக்குச் வேலை நாட்களில் பி.ப. 3.00 மணிக்கு முன் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அந்த விலைக்கோரல் பிணை முறி 2024-08-05ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.
09. கேள்வியின் பெறுமதி 5,000.000.00 ரூபாவை விஞ்சும் பட்சத்தில் வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் உள்நாட்டு முகவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்து கொண்ட படிவத்தை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
10. வேலைத் தளப் பரிசீலனை 2024-04-25ஆம் திகதி ஏற்பாடு செய்யப்படும். விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான முன்னோடி தெளிவுபடுத்தல் 2024-04-25ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் 3ம் மாடியிலுள்ள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் இடம்பெறும்.
11. விலைமனுதாரரினால் வியாபாரப் பதிவு மற்றும் வெட் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| இல. | பெறுகை இல. | பொருட்களின் விபரம் | விலைமனுப் பிணை முறியின் அளவு | விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி |
|---|---|---|---|---|
| 01 | **3/1/1/2185/24Q/2M/5** | குடாஓய நீர்த்தேக்கத்தின் 02 ரேடியல் கேட்களுக்குத் தேவையான சகல துணைப்பாகங்கள் சகிதம் ஹைட்ரோலிக் உயர்த்தியொன்றை வழங்குதல். (Supply of Hydraulic Hoists with all necessary accessories for radial gates 02Nos of Kuda Oya Reservoir) | ரூபா 800,000.00 | 2024-05-07 |

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**பணிப்பாளர் நாயகம் அலுவலகம்,**
**அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்,**
**கொலொன்னாவை.**
**2024-04-08.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## உள்ளூராட்சித் திணைக்களம், வட மத்திய மாகாணம்

## உலக வங்கி மற்றும் ஐ.ஒ. நிதியளிக்கப்பட்டது

## உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP)

## PROJECT ID P-163305

01. உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்ட செலவை நோக்கி உலக வங்கியிடம் இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு பின்வரும் ஒப்பந்தங்களின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்தப் பகுதியை செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
    - பொலன்னறுவை பிரதேச சபையில் சேவாகம கிராமிய சந்தை கட்டிடத்தில் எஞ்சிய வேலையை பூர்த்தி செய்தல்.
    - வலிகந்த புதிய சந்தை கட்டிட (7 கடைகளுடன் மேல் மாடி) எஞ்சிய வேலையை பூர்த்தி செய்தல்.
    - கலென்பிந்துனுவெவ வாரச் சந்தையின் முகப்பில் 15 பொது சந்தை கடைகளின் நிர்மாணம்
    - திம்புலாகல பிரதேச சபையின் மனம்பிட்டிய நகரில் கிராமிய சந்தை கட்டிடத்தின் நிர்மாணம்.
    - பதவிய பிரதேச சபையில் பராக்ரமபுற பொது சந்தை கட்டிடத்தின் நிர்மாணம்.
    - பதவிய வாரச் சந்தை முகப்பில் சந்தை கடையின் நிர்மாணம்.
    - நொச்சியாகம பஸ் தரிப்பிடத்தின் பின்னால் உள்ள நாளாந்த சந்தையின் நிர்மாணம்.
    - நொச்சியாகம பிரதேச சபையில் கட்டுபத்வெவ கிராமிய நீர் திட்டத்தில் நீர் விநியோகப் பாதையின் நீடிப்பு.
    - பொலன்னறுவை பிரதேச சபையின் கல்லெல்ல வாராந்த சந்தையில் வாரச்சந்தை மற்றும் 6 சந்தை கட்டிடங்களின் நிர்மாணம்.
    - ஹிகுரக்கொட பிரதேச சபைக்கு முன்னால் சிற்றுண்டிச்சாலையின் நிர்மாணம்.
    - பதவிய பிரதேச சபைக்காக களஞ்சியசாலை கட்டிடத்தின் நிர்மாணம்.
    - கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபையில் கூன்வெவ சிறு நகரில் பொதுக் கழிப்பறையின் நிர்மாணம்.
    - ராஜாங்கனய சந்தி வாரச் சந்தையின் மேம்பாடு.
    - இபலோகம பிரதேச சபையில் பூகொல்லாகம பிலிசரு உரச் சாலையின் மேம்பாடு.
02. கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திட்டங்களுக்கான பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் சார்பில் மாகாண திட்ட பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
03. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
04. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட CIDA பதிவை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
05. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு தேவையான தகைமை விலைமனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
06. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வார நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை அநுராதபுரம், ஹரிஸ்சந்திர மாவத்தை, மாகாண சபை கட்டிட வளாகம், வ.ம.மா. – உள்ளூராட்சித் திணைக்கள, பிரதிப் பணிப்பாளர் நாயகம்/ ஆணையாளர் இடமிருந்து (தொலைபேசி: 025-2234728, தொலைநகல் - 025-2234738, மின்னஞ்சல்: ncplg2020@gmail.com) மேலதிக விபரங்களை பெறலாம்.
07. கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை 2024.04.05 ஆம் திகதி தொடக்கம் 2024.04.29 ஆம் திகதி வரை அநுராதபுரம், ஹரிஸ்சந்திர மாவத்தை, மாகாண சபை கட்டிட வளாகம், வ.ம.மா. – உள்ளூராட்சித் திணைக்கள, பிரதிப் பணிப்பாளர் நாயகம்/ ஆணையாளர் இடமிருந்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
08. 2024.04.30ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் பிரதி பணிப்பாளர் நாயகம்/ ஆணையாளர், வ.ம.மா. – உள்ளூராட்சித் திணைக்களம், மாகாண சபை கட்டிட வளாகம், ஹரிஸ்சந்திர மாவத்தை, அநுராதபுரம் என்ற முகவரிக்கு இரு பிரதிகளில் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது நிறைவடைந்த பின் அவை உடன் திறக்கப்படும்.
09. அனைத்து விலைமனுக்களும் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்; தொடர்புடைய திட்டங்களுக்கான விலைமனு பிணை தொகை மற்றும் விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| இல. | திட்டப் பெயர் | மதிப்பிடப் பட்ட செலவு மற்றும் நிர்மாணக் காலம் | CIDA தரம் மற்றும் நிபுணத்துவம் | விலை மனுக்களின் செல்லுபடி | விலை மனு பிணை தொகை மற்றும் செல்லுபடி | விலை மனுவுக்கு முந்திய சந்திப்பு திகதி மற்றும் நேரம் | மீளளிக் கப் படாத கட்ட ணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | பொலன்னறுவை பிரதேச சபையில் சேவாகம கிராமிய சந்தை கட்டிடத்தில் எஞ்சிய வேலையை பூர்த்தி செய்தல். | 27.32 மில். 120 நாட்கள் | $C_5$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 119 நாட்கள் 2024.09.27 | 400,000.00 24.09.2024 | 2024.04.19 அன்று பி.ப. 2.30 | 10,000.00 |
| 02. | வலிகந்த புதிய சந்தை கட்டிட (7 கடைகளுடன் மேல் மாடி) எஞ்சிய வேலையை பூர்த்தி செய்தல். | 24.80 மில். 120 நாட்கள் | $C_6$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம | 77 நாட்கள் 2024.07.19 | 350,000.00 13.08.2024 | 2024.04.19 அன்று மு.ப. 10.30 | 10,000.00 |
| 03. | கலென்பிந்துனுவெவ வாரச் சந்தையின் முகப்பில் 15 பொது சந்தை கடைகளின் நிர்மாணம் திம்புலாகல பிரதேச சபையின் மனம்பிட்டிய நகரில் கிராமிய சந்தை கட்டிடத்தின் நிர்மாணம். | 30.21 மில். 120 நாட்கள் | $C_5$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 119 நாட்கள் 2024.08.27 | 450,000.00 24.09.2024 | 2024.04.19 அன்று பி.ப. 2.30 | 10,000.00 |
| 04. | திம்புலாகல பிரதேச சபையில் மனம்பிட்டிய நகரில் கிராமிய சந்தை கட்டிடத்தின் நிர்மாணம். | 24.93 மில். 120 நாட்கள் | $C_6$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 2024.08.27 | 200,000.00 13.08.2024 | 2024.04.22 அன்று மு.ப. 11.00 | 10,000.00 |
| 05 | பதவிய பிரதேச சபையில் பராக்ரமபுற பொது சந்தை கட்டிடத்தின் (பழைய வாரச் சந்தை காணி) நிர்மாணம். | 30.15 மில். 120 நாட்கள் | $C_5$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 119 நாட்கள் 2024.08.27 | 450,000.00 24.09.2024 | 2024.04.22 அன்று மு.ப. 11.00 | 10,000.00 |
| 06 | பதவிய வாரச் சந்தை முகப்பில் சந்தை கடையின் நிர்மாணம். | 11.80 மில். 120 நாட்கள் | $C_6$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 2024.07.16 | 150,000.00 13.08.2024 | 2024.04.22 அன்று மு.ப. 11.00 | 10,000.00 |
| 07 | நொச்சியாகம பஸ் தரிப்பிடத்தின் பின்னால் உள்ள நாளாந்த சந்தையின் நிர்மாணம். | 27.78 மில். 120 நாட்கள் | $C_5$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 119 நாட்கள் 2024.08.27 | 400,000.00 24.09.2024 | 2024.04.19 அன்று மு.ப. 10.00 | 10,000.00 |
| 08 | நொச்சியாகம பிரதேச சபையில் கட்டுபத்வெவ கிராமிய நீர் திட்டத்தில் நீர் விநியோகப் பாதையின் நீடிப்பு. | 11.56 மில். 120 நாட்கள் | $C_6$ அல்லது அதற்கு மேல் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு | 77 நாட்கள் 2024.07.16 | 150,000.00 13.08.2024 | 2024.04.19 அன்று மு.ப. 10.00 | 5,000.00 |
| 09 | பொலன்னறுவை பிரதேச சபையின் கல்லெல்ல வாராந்த சந்தையில் வாரச்சந்தை மற்றும் 6 சந்தை கட்டிடங்களின் நிர்மாணம். | 55.17 மில். 120 நாட்கள் | $C_4$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 119 நாட்கள் 2024.08.27 | 800,000.00 24.09.2024 | 2024.04.19 அன்று பி.ப. 2.30 | 10,000.00 |
| 10 | ஹிங்குரக்கொட பிரதேச சபைக்கு முன்னால் சிற்றுண்டிச்சாலையின் நிர்மாணம். | 15.38 மில். 120 நாட்கள் | $C_7$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 2024.07.16 | 200,000.00 13.08.2024 | 2024.04.22 அன்று பி.ப. 14.00 | 10,000.00 |
| 11 | பதவிய பிரதேச சபைக்காக களஞ்சியசாலை கட்டிடத்தின் நிர்மாணம். | 7.0 மில். 90 நாட்கள் | $C_7$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 2024.07.16 77 நாட்கள் | 200,000.00 13.08.2024 | 2024.04.22 அன்று மு.ப. 11.00 | 5,000.00 |
| 12 | கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபையில் கூன்வெவ சிறு நகரில் பொதுக் கழிப்பறையின் நிர்மாணம். | 2.23 மில். 90 நாட்கள் | $C_8$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 2024.07.16 | 30,000.00 13.08.2024 | 2024.04.23 அன்று பி.ப. 15.30 | 5,000.00 |
| 13 | ராஜாங்கனய சந்தி வாரச் சந்தையின் மேம்பாடு. | 10.08 மில். 90 நாட்கள் | $C_6$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 2024.07.16 | 150,000.00 13.08.2024 | 2024.04.23 அன்று பி.ப. 12.30 | 5,000.00 |
| 14 | இபலோகம பிரதேச சபையில் பூகொல்லாகம பிலிசரு உரச் சாலையின் மேம்பாடு. | 7.8 மில். 90 நாட்கள் | $C_7$ அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 77 நாட்கள் 2024.07.16 | 200,000.00 13.08.2024 | 2024.04.23 அன்று மு.ப. 10.30 | 5,000.00 |

..................................
**தலைவர்,**
**மாகாண திட்டப் பெறுகைக் குழு,**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP),**
**மாகாண சபை கட்டிட வளாகம்,**
**ஹரிஸ்சந்திர மாவத்தை,**
**அநுராதபுரம்**

# பதுளைக்கான ரயில் சேவை 100 வருட பூர்த்தி "துன்கந்த ஒடிசி" சொகுசு ரயில் சேவை ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பதுளைக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டு 100 வருடங்கள் பூர்த்தியாவதையொட்டி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து " துன்கந்த ஒடிசி " என்ற பெயரில் விசேட ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து பதுளைக்கான இந்த விஷேட சொகுசு ரயில் சேவையை போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

அந்த விஷேட முதலாவது சொகுசு ரயில் பயணத்தை பச்சைக் கொடியை அசைத்து அமைச்சர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன, சிறந்த ரயில் சேவை மூலமாக சுற்றுலாத்துறையை முன்னேற்றுவதற்கான வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவித்தார்.

அத்துடன் தேசிய மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு வினைத்திறனான நவீன ரயில் சேவையை வழங்கும் வகையில் ரயில் சேவை நவீனமயப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். பதுளைக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டு 100 வருடங்கள் நிறைவுறுவதையொட்டி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து "துன்கந்த ஒடிசி " என்ற பெயரில் விசேட ரயில் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என நான்கு மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி மதத் தலைவர்கள் ஆசி வழங்கியதையடுத்து இந்த விசேட ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இந்த விஷேட ரயில் சேவையின் வெள்ளோட்டத்தில் ஊடகவியலாளர்கள் கொழும்பிலிருந்து பதுளைக்கு 'துன்கிந்த ஒடிசி'' ரயிலில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அது தொடர்பில் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவிக்கையில்,

சுற்றுலாத்துறை மேம்பாட்டுடன் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ரயில் சேவையானது சுற்றுலாத்துறையில் முக்கியமான பங்களிப்பை வழங்குகின்றது. கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கும் பதுளைக்குமிடையிலான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன.

அந்த வகையில் மலையகத்துக்கான ரயில் சேவையை மேம்படுத்தும் வகையில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து 'துன்கிந்த ஒடிசி' விசேட ரயில் சேவை ஆரம்பிக்கப்படுகிறது. அத்துடன் எமது நாட்டின் பொறியியலாளர்களினால் உருவாக்கப்பட்ட சுற்றுலாப் பயணிகளைக் கவரும் திறந்த வெளி காட்சிகாண் விசேட ரயில் தெமோதர ரயில் நிலையத்திலிருந்து பதுளை வரை சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது. அந்த வகையில் மலையகத்திற்கான ரயில் சேவையை விரிவுபடுத்தி சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். அதேவேளை கொழும்பு பதுளைக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டு 100 வருடங்கள் நிறைவடைவதையடுத்து பதுளை ரயில் நிலையத்தில் விசேட நிகழ்வு விமரிசையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து " துன்கந்த ஒடிசி ரயில் பதுளை ரயில் நிலையத்தை சென்றடைந்ததும் மேற்படி விசேட நிகழ்வு அங்கு இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் அமைச்சர் பந்துல குணவர்தன, அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், ரயில்வே திணைக்கள உயரதிகாரிகளும் கலந்து கொண்டதுடன் ஞாபகார்த்த முத்திரையும் வெளியிடப்பட்டது. சுற்றுலாப் பயணிளைக் கவரும் திறந்த வெளி காட்சிகாண் விசேட ரயிலில் தெமோதர ரயில் நிலையத்திலிருந்து பதுளை வரை சுற்றுலாப் பயணிகளுடன் அமைச்சர் பந்துல குணவர்தன உட்பட அமைச்சர்கள் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் பயணித்தமை குறிப்பிடத்தக்கது.







தினகரன் விளையாட்டு
sports.tkn@lakehouse.lk

## சர்வதேச செய்திகள்

## குதிகால் வலியால் இம்முறை ஐ.பி.எல். தொடரில் வனிந்து விலகுவது உறுதி

இலங்கை லெக் ஸ்பின் சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்க நாட்பட்ட குதிகால் வலி காரணமாக இம்முறை இந்திய பிரீமியர் லீக் தொடரில் சன்ரைசஸ் ஹைதராபாத் அணியில் இருந்து வலகுவதை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

அவர் இன்னும் சன்ரைசஸ் அணியுடன் இணையாத நிலையில் இந்தப் பருவத்தில் அவர் பங்கேற்காதது தொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு அறிவித்துள்ளது.



எனினும் சன்ரைசஸ், ஹசரங்கவின் விலகல் பற்றி உறுதி செய்யவோ மாற்று வீரர் பற்றியோ அறிவிக்காதபோதும் அந்த அணி மாற்று வீரரை தேடி வருவதாக தெரியவருகிறது. கடைசியாக கடந்த மார்ச்சில் பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் ஆடிய ஹசரங்க, இலங்கை கிரிக்கெட் மருத்துவ குழுவால் சிகிச்சை பெற்றார். அவரது தசைக்கூட்டு அமைப்பின் தேய்வு மற்றும் கிழிவு காரணமாக இடது குதிகாலில் வலி இருந்து வருவதாக தெரியவருகிறது. இதனால் அவர் ஐ.பி.எல். இல் விளையாடுவதற்கு இலங்கை கிரிக்கெட்டிடம் இருந்து அனுமதியை பெறுவதற்கு முன் வெளிநாட்டு மருத்துவ நிபுணர்களின் ஆலோசனையை பெற வேண்டி இருந்தது. அவர் டுபாயில் உள்ள நிபுணர் ஒருவரின் ஆலோசனையை பெற்றிருப்பதாக சன்ரைசஸ் தலைமை பயிற்சியாளர் டானியல் விட்டோரி கடந்த வியாழனன்று குறிப்பிட்டிருந்தார். இந்நிலையிலேயே அவர் ஐ.பி.எல். இல் இருந்து விலகும் அறிவிப்பு வெளியாகியுள்ளது. கடந்த டிசம்பரில் நடந்த 2024 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். ஏலத்தில் ஹசரங்கவை சன்ரைசஸ் அணி இந்திய நாணயப்படி ஒன்றரை கோடிக்கு வாங்கியது. முன்னதாக அவர் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு ஆடியதோடு அந்த அணி அவரை 2022 ஏலத்திர் 10.75 கோடி விலை கொடுத்தேவாங்கியது. 2022 பருவத்தில் சிறப்பாக ஆடிய அவர் 26 விக்கெட்டுகளை வீழ்த்தினார். எனினும் 2023 பருவத்தில் எட்டு போட்டிகளில் மாத்திரமே விளையாடிய அவர் ஒன்பது விக்கெட்டுகளையே பெற்றார்.

எவ்வாறாயினும் எதிர்வரும் ஜூன் 1 ஆம் திகதி அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் ஆரம்பமாகும் டி20 உலகக் கிண்ணத்தில் இலங்கை அணியின் தலைவராக ஹசரங்க செயற்படவுள்ளார். இந்தத் தொடருக்கு முன்னர் அவர் உடல் தகுதி பெறுவது அவசியமாகும். பங்களாதேஷுக்கு எதிரான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியின்போது நடுவருடன் மோதலில் ஈடுபட்ட ஹசரங்கவுக்கு அடுத்து நடைபெற்ற இரண்டு டெஸ்ட் போட்டிகளிவும் ஐ.சி.சி. தடை விதித்தது. டெஸ்ட் கிரிக்கெட்டில் ஓய்வில் இருந்து அணிக்கு திரும்பிய நிலையிலேயே அவருக்கு இந்தத் தடை அமுல்படுத்தப்பட்டது. இல்லாவிட்டால், அவருக்கு டி20 உலகக் கிண்ணத்தின் முதல் நான்கு போட்டிகளிலும் தடை அமுல்படுத்தப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் டி20 தடையை தவிர்ப்பதற்கே அவர் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு மீண்டும் திரும்பியதாக கூறப்படுவதை மறுத்த இலங்கை கிரிக்கெட் முன்கூட்டியே அவர் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு திரும்புவதை அறிவித்ததாக குறிப்பிட்டது.

ஏழாவது மாதத்தை எட்டியது காசா போர்:

## உக்கிர தாக்குதல்களுக்கு இடையே கெய்ரோவில் மீண்டும் போர் நிறுத்த பேச்சுவார்த்தை ஆரம்பம்

காசா போர் நேற்றுடன் (07) ஏழாவது மாதத்தை அடைந்ததோடு புதிய அமைதிப் பேச்சுவார்த்தை மற்றும் பணயக்கைதிகளை விடுவிக்கும் உடன்படிக்கை ஒன்றுக்கான முயற்சி எகிப்து தலைநகர் கெய்ரோவில் நேற்று மீண்டும் ஆரம்பமானது. இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் பிரதிநிதிகள் இடையிலான மறைமுகமான பேச்சுவார்த்தையில் அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ. தலைவர் பில் பர்ன்ஸ் மற்றும் கட்டார் பிரதமர் ஷெய்க் முஹமது பின் அப்துல்ரஹ்மான் பின் ஜசிம் அல்தானி ஆகியோர் எகிப்து மத்தியஸ்தர்களுடன் இணைந்ததாக எகிப்தின் அல் கஹுரா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

காசாவில் முழுமையான போர் நிறுத்தம் மற்றும் இஸ்ரேலிய படைகள் அங்கிருந்து வாபஸ் பெறுவதை பிரதான நிபந்தனைகளாக விதித்து வரம் ஹமாஸ் தனது பிரதிநிதிகளை கெய்ரோவுக்கு அனுப்பியதாக குறிப்பிட்டுள்ளது. இதில் ஹமாஸ் பிரதித் தலைவர் கலீல் அல் ஹய்யா தலைமையிலான பிரதிநிதிகள் குழு ஒன்றை ஹமாஸ் கெய்ரோவுக்கு அனுப்பியுள்ளது. காசாவில் ஏழு தொண்டுப் பணியாளர்கள் கொல்லப்பட்டதற்கான பொறுப்பை மிக அரிதாக ஏற்றுக்கொண்டு இரு அதிகாரிகளை நீக்கியதாக இஸ்ரேல் குறிப்பிட்டிருப்பதோடு, காசா விரைவில் பஞ்சம் ஒன்றை எதிர்கொண்டிருப்பதாக மனிதாபிமான அமைப்புகள் எச்சரித்திருக்கும் நிலையிலேயே இந்த போர் நிறுத்த பேச்சுவார்த்தை ஆரம்பமாகியுள்ளது.

கடந்த ஏப்ரல் 1 ஆம் திகதி அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட 'வேர்ல்ட் சென்ட்ரல் கிட்சன்' அமைப்பின் பணியாளர்கள் கொல்லப்பட்ட சம்பவம் சர்வதேச அளவில் கண்டனத்தை வலுக்கச் செய்திருப்பதோடு சுயாதீன விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டு வருகிறது. "நகரும் அனைத்தும் ஆறு மாதங்களாக இலக்கு வைக்கப்பட்டு வருவது தெரிகிறது" என்று மேற்படி தொண்டு அமைப்பின் நிறுவனரான ஜோஸ் அன்ட்ரஸ் ஏ.பி.சி. செய்தி நிறுவத்திற்கு குறிப்பிட்டார். "இந்தப் போர் மனித குலத்திற்கு எதிரானது" என்று சுட்டிக்காட்டினார். தொண்டுப் பணியாளர்களின் மரணம் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான முறுகலை அதிகரித்திருப்பதோடு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு இடையே கடந்த வாரம் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலிலும் அது பிரதிபலித்தது. உடன் போர் நிறுத்தம் ஒன்றுக்கு வலியுறுத்திய பைடன், முதல் முறையாக இஸ்ரேலுக்கு அமெரிக்கா வழங்கி வரும் ஆதரவை நிபந்தனைக்கு உட்படத்தினார். பொதுமக்கள் கொல்லப்படுவதை குறைப்பது மற்றும் மனிதாபிமான நிலையை மேம்படுத்துவதற்கு பைடன் தனது உரையாடலில் நெதன்யாகுவுக்கு நிபந்தனை விதித்திருந்தார். காசாவில் உள்ள 2.4 மில்லியன் மக்களும் குண்டு மழை மற்றும் துன்பங்களில் இருந்து விடுபடுவதற்கு கடும் உதவியை நாடி இருப்பதாக வடக்கு காசாவைச் சேர்ந்த 52 வயதான ஆறு குழந்தைகளின் தந்தையான முஹமது யூனிஸ் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். 'இதற்கு அரையாண்டுகள் ஆகிவிட்டது, பட்டினி தொடர்கிறது' என்று தற்போது உடைந்த கட்டடம் ஒன்றில் வசிக்கும் அந்த ஆடவர் கூறினார். 'எமது குழந்தைகளின் மெலிந்த உடல்களை பார்க்க ஆன்மாவை பறிக்கிறது. உதவியற்றவனாகவும் அவமானப்படுத்தப்பட்டவனாகவும் உணர்கிறேன். குண்டுவீச்சுகள், உயிரிழப்புகள் மற்றும் அழிவுகள் பொதுமில்லையா? இன்னும் உடல்கள் இடிபாடுகளில் சிக்கியுள்ளன. துர்நாற்றம் வீசுகிறது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

**உடன்பாட்டை எட்ட அழுத்தம்**

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்து ஆரம்பமான இந்தப் போர் தற்போது ஏழாவது மாதத்தை தொட்டிருக்கும் நிலையில் போர் தொடர்ந்து உக்கிரமாக இடம்பெறுவதோடு இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்கள் தொடர்ந்து நீடித்து வருகிறது. கான் யூனிஸ் நகரில் ஏவுகணைகள் கொண்டு மூன்று இஸ்ரேலிய டாங்கிகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியதாக ஹமாஸ் அமைப்பு கடந்த சனிக்கிழமை கூறியது. இதில் 14 இஸ்ரேலிய துருப்புகள் கொல்லப்பட்டதாகவும் அது தெரிவித்தது.

இது தொடர்பில் இஸ்ரேல் தரப்பில் இருந்து எந்த பதிலும் கூறப்படாதபோதும் காசாவில் தமது நான்கு துருப்புகள் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் கூறியது. இதில் அல் அமல் சுற்றுப்புற பகுதி மற்றும் அல் அமல் மருத்துவமனைக்குள் உக்கிர மோதல்கள் இடம்பெற்று வருவதாக கான் யூனிஸ் நகரின் மேற்கில் செயற்படும் இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது. இங்கு பொதுமக்கள் சிக்கி இருப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு குழுவினர் மற்றும் பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் காசாவில் இஸ்ரேல் தரைவழி போர் நடவடிக்கையை ஆரம்பித்தது தொடக்கம் கொல்லப்பட்ட துருப்புகளின் எண்ணிக்கை 260 ஆக அதிகரித்திருப்பதாக அந்த இராணுவம் கூறியது. எனினும் இந்தப் போர் காரணமாக ஒட்டுமொத்தமாக 604 துருப்புகள் கொல்லப்பட்டிருப்பதாக இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது. இதில் 41 படையினர் தமக்குள் தவறுதலாக நடத்திய துப்பாக்கிச் சூடுகளில் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மறுபுறம் 184 ஆவது நாளாகவும் நேற்றும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்த நிலையில் மேலும் பல உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. காசாவின் தெற்கில் உள்ள கான் யூனிஸ் மற்றும் ரபா நகரங்களில் உள்ள பொதுமக்கள் இல்லங்கள் மீது இஸ்ரேலின் உக்கிர வான் தாக்குதல்கள் நீடித்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது. இதில் கான் யூனிஸின் கிழக்காக உள்ள அல் சம்மா கிராமம் மற்றும் பனி சுஹைலா சிறு நகரை நோக்கி இஸ்ரேலிய துருப்புகள் சூடு நடத்தியதாகவும் இதனால் பலர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்திருப்பதாகவும் அங்குள்ள வபா செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார். ஏழு மாதங்களை தொட்டிருக்கும் போரில் காசாவில் 33 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு இதில் 70 வீதத்துக்கும் அதிகமானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர். இந்நிலையில் பணயக்கைதியாக பிடிக்கப்பட்ட 47 வயது இஸ்ரேலிய விவசாயியான எலட் கட்ஸிரின் உடலை தெற்கு கான் யூனிஸில் இருந்து மீட்டதாக இஸ்ரேலி இராணுவம் தெரிவித்துள்ளது. இவரை பிடித்த பலஸ்தீன ஜிஹாதிக்களால் இவர் கடந்த ஜனவரி நடுப்பகுதியில் கொல்லப்பட்டிருப்பதாக உளவுத் தகவல்களை மேற்கோள்காட்டி இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. ஹமாஸ் அமைப்பின் கூட்டணியான இஸ்லாமிய ஜிஹாத் இது தொடர்பில் எந்த பதிலும் அளிக்கவில்லை. பலஸ்தீன போராளிகளால் கடத்திச் செல்லப்பட்ட சுமார் 253 பணயக்கைதிகளில் கட்ஸிரும் ஒருவராவார். தொடர்ந்து சுமார் 130 பணயக்கைதிகள் காசாவில் இருப்பதாக நம்பப்படுவதோடு இவர்களில் 30 பேர் வரை மரணித்திருப்பதாக நம்பப்படுகிறது. இஸ்ரேலின் இரண்டு வார சுற்றிவளைப்பினால் வெறும் இடிபாடுகளாக மாறியிருக்கும் காசாவின் மிகப்பெரிய மருத்துவமனையான அல் ஷிபா மருத்துவமனையை அணுகுவதற்கு உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதிகள் குழுவுக்கு அனுமதி கிடைத்துள்ளது. காசா நகர மருத்துவமனை மனிதப் புதைகுழிகளுடன் தற்போது வெறிச்சோடி காணப்படுவதாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனொம் கெப்ரியேசுஸ் தெரிவித்துள்ளார். அந்த மருத்துவமனைக்குச் சென்றபோது அங்கு தமது குழு குறைந்து ஐந்து உடல்களை கண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை ஆரம்பமானதையொட்டி, ஹமாஸ் அமைப்புடன் உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கு இணக்கத்தை பெறும்படி எகிப்து மற்றும் கட்டார் தலைவர்களை பைடன் கேட்டுள்ளார். கடந்த நவம்பரில் ஒரு வாரம் நீடித்த போர் நிறுத்தத்திற்கு பின்னரான பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்தும் இழுபறி நீடித்து வருகிறது. இந்நிலையில் கடந்த வியாழனன்று நெதன்யாகுவிடம் தொலைபேசியில் பேசியபோது, உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கு தமது பேச்சு வார்த்தையாளர்களுக்கு அதிகாரத்தை வழங்கும்படி பைடன் வலியுறுத்தியதாக அமெரிக்க தேசிய பாதுகாப்பு கௌன்சில் பேச்சாளர் ஜோன் கிர்பி தெரிவித்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 8ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.